47

வ்யய ௵ புரட்டாசி ௴

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 9

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

TL
N46.5.9.
189225

வர்ஷச் சந்தா : ரூபா 3—0—0

September 194
Vol. 5 No. 9

ஸ்ரீ:

விஷய ஸூசிகை.

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	191
2.	எவ்வுள்கிடந்தான் எழில்	196
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	198
4.	அபுநராவ்ருத்தி பரிஹாரம் ...	199
5.	செய்திகள்	207
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள் ...	208

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா '46 ஆகஸ்ட்மீ-த்துச் சந்தா வரவு

			ரூ.	அ.
53	ஸ்ரீ.	S. S. ராஜகோபாலன், மாதுங்கா, பம்பாய்.	3	0
109	,,	K. S. ஸௌந்தரராஜய்யங்கார், நாகப்பட்டணம்	3	0
137	,,	P. S. கோவிந்தையங்கார், ஸ்ரீரங்கம்	3	0
171	,,	K. S. நாராயணையங்கார், தென்காசி, (S. N. ராகவாசாரியர்) ...	6	0
203	,,	ஆனரபில் S. வரதாசார்யர், புதுடெல்ஹி (1945-46)	6	0
234	,,	V. T. வேதாந்த ராமாநுஜாசார்யர், பூந்தமல்லி	3	0
258	,,	A. க்ருஷ்ண ராவ், செங்கல்பட்டு	3	0
279	,,	K. S. கோபாலஸாமி ஐயங்கார், மயிலாப்பூர்	3	0
284	,,	K. N. தேசிகாசார்யர், திருவெவ்வுளூர்	3	0
306	,,	K. R. ராமாநுஜம், மயிலாப்பூர்	3	0
332	,,	M. S. ஸ்ரீநிவாஸாசார்யர், மோஹனூர்	3	0
510	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார், திருக்குறுங்குடி	3	0
586	,,	T. N. க்ருஷ்ணமாசார்யர், ரெய்ச்சூர்	3	0
588	,,	K. ஸ்ரீநிவாஸையங்கார், திருச்சி	5	0
642	,,	C. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்	3	0
	,,	T. ராஜகோபாலாசார்யர், திருவழுந்தூர்	1	0
607	,,	S. வராஹஸ்வாமி ஐயங்கார், கூவகம்	3	0
	ஸ்ரீமதி	கனகவல்லி அம்மாள், தேனாம்பேட்டை	3	0
		ரூ.	60	0

ஸ்ரீ:

சந்தாதாரர்களுக்கு ஒரு விண்ணப்பம்.

...மது ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியைக்குச் செலுத்தவேண்டிய சந்தாத் தொகையை ...னும் செலுத்தாமலிருக்குமவர்கள், க்ருபை பண்ணி சீக்ரத்திலேயே ...தத் தொகையைச் செலுத்தி விடும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். இது ...விஷயமாகத் தேவரீர்களிடமிருந்து இந்த மாஸத்திற்குள் யாதொரு பதிலும் கிடைக்கப் பெறாவிடில், அடுத்த மாஸத்து ஸஞ்சிகையைத் தேவரீர்க்கு V. P. மூலம் அனுப்புவதாக உத்தேசம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[illegible] OF THE REGISTRAR OF BOOKS
[illegible] JAN 1947
MADRAS

ஸம்புடம் 6	வ்யய ௵ புரட்டாசி ௴	ஸஞ்சிகை [illegible]

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

—:-0-:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌗𑍇𑌹𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ [illegible] ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்[illegible] சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

———o———

ஶ்ரீ:

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை 7 பக்கம் 155-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி]

விவேகர்:—[மிக்க அநுராகத்துடன் ஸேவித்துக் கொண்டே] கேட்பவர் செவிகளுக்கு அமுதமும், வர்ணிப்பதற்கு ஶக்ய மில்லாத மஹிமையை அளிப்பதுமான ஓர் அத்புதமான கீதத்தைப் பாடிக்கொண்டு மேலும் கீழுமாய் ஆநந்தமாய்த் துள்ளிக் கிளம்பிக் குதிக்கிறார். இவர் பாடி ஆடும் கீதம் பின்வருமாறு:—

"[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥"

தஶமுகனான ராவணனது ஶத்ருவான ராமனுடைய ஸௌலப்யமும் …மையுமான வ்ருத்தங்களுக்குப் பல்லாண்டு பாட வேணும். ராமன், …ன் பரத்வாஜரிடமும் ஆதித்யம் பெற்றார். அப்படியே வநமாநுஷியான ஶபரியின் க்ருஹத்திலும் ஆதித்யம் பெற்றார். விச்வாமித்ர மஹர்ஷியைத் தம் ப்ரபுவாக (ஸ்வாமியாக)நினைத்து, 'உம்முடைய கிங்கரர்களாக நாங்கள் இதோ காத்து நிற்கிறோம். உம் திருவுள்ளப்படி யெல்லாம் ஆஜ்ஞை செய்யவேணும். என்ன கட்டளையை நாங்கள் செய்யவேணும் ?' என்று பேசிக் கொண்டு, விச்வாமித்ர முனியை ப்ரபுவாகக் கொண்டு அவர் கட்டளைகளை அநுஸரித்தார். "லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதமிச்சதி' என்றபடி லோகநாதரான தாம் அக் குரங்கை அநுஸரித்தார். விபீஷணனை ஏற்றுக்கொள்வதற்கு ஸுக்ரீவனைத் தமது மதுர பாஷணங்களாலும், தமது அத்புதமான லோகாதீதமான பராக்ரமத்தைை வெளியிட்டு அவன் மனத்தை த்ருப்தி செய்தும், அவனை அநுஸரித்து அவனையே கூட்டி வரச் சொல்லி ஏற்றுக்கொண்டார். ஸுக்ரீவர் …ாம கோஷ்டியில் மஹா ராஜராக வழங்கினார். முன் இரண்டு அடிகளில் ராம…டைய வ்ருத்திகளின் பெருமையை விளக்கினர். அவர், அவருடைய அஸ்த்ரம், …டிற்கும் இப்படிக்குள்ள ஸ்வபாவத்தை வர்ணிக்கிறார். ப்ருகுபதி என் …ஶுராமர் பரீக்ஷைக்காகக் கையில் தம் வில்லைக் கொடுத்து அதில் … ஶரம் தொடுக்கும்படி கர்வத்துடன் கூறியதும், வில்லை ஆரோபணம்

"[illegible] ஶரம் ஸஜ்யம் சகார ஹ"

…ன்றபடி ஶரத்தைத் தொடுத்தபோது அந்த ஶரத்துக்குப் பரசுராமருடைய தபஸ்ஸினால் ஸம்பாதிக்கப்பட்ட புண்ய லோக போகாத்ருஷ்டத்தை இரையாகக் கொடுத்து அந்த ஶரம் வேறு ஹிம்ஸை செய்யாமல் திரும்பச் செய்தார். அப்படியே காகத்தின் ஒரு கண்ணைத் தமது ப்ரமஹாஸ்த்ரத்துக்குத் தக்ஷிணையாகக் கொடுத்துத் திருப்பினர்.

189225

'பரத்வாஜர்' என்னும் சொல்லுக்கு 'ஆஹாரத்தை அளிப்பவர்' என்பது பொருள். அயோத்தியிலிருந்து தண்டகாவநத்துக்குப் போகையிலும், லங்கையிலிருந்து அயோத்திக்குத் திரும்பி வருகையிலும், அவர் ஆதித்யத்தை ராமன் புஜித்தார். குஹர் ஆதித்யமாக ஸமர்ப்பித்த விவித வந்ய பலங்களைப் புஜிக்கவேயில்லை; கங்கா தீர்த்தத்தை மட்டும் பாநம் செய்துவிட்டு ராத்ரியைப் போக்கினர். பரத்வாஜருடைய வந்ய மூல பலாச்ரயமான நாநா விதாந்ந ரஸங்களைப் புஜித்தார். அப்படியே வநவாஸம் முடிவில் அயோத்தி செல்வதற்கு முன், பரத்வாஜருடைய ஆதித்யத்தை க்ரஹித்தார். இப்படி வநவாஸத் தொடக்கமும் வநவாஸ ஸமாப்தியும் வால்மீகி ஸிஷ்யரான பகவான் பரத்வாஜருடைய பரிக்ரஹத்தோடு ஆயின. ஆரண்ய காண்டத்தில் அநேக ரிஷிகளின் ஆச்ரமங்களில் ஆதித்யத்தைப் பரிக்ரஹித்தார். ஆரண்ய காண்ட முடிவில் ஸபரியின் ஆதித்யத்தைப் பரிக்ரஹித்தார். மதங்க முநியின் ஆச்ரமம், அவர் மேலே சென்ற பிறகு ஸபரியின் ஆச்ரம மாயிற்று. அவளை அந்த ஆச்ரமத்தில் இருக்கச் செய்து, அவள் அதீநமாக அந்த ஆச்ரமத்தை விட்டு விட்டு, அது ஸபரியின் க்ருஹமாகவே ஆய்விட்ட தென்பதை 'ஸபரீ க்ருஹம்' என்பதனல் காட்டுகிறார். 'ஸபரியின் ஆச்ரமம்' என்பது ருஷியின் வர்ணநம். அந்த ஆச்ரமம் அவளுக்கு ஸொந்த க்ருஹம் போலவே ஆய்விட்ட தென்று ருஷியின் விஸ்மயத்தை ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிறார். 'ஸாஸநாத் ஹவாதிநः' என்றபடி ராமஸரம் விச்வாமித்ரரை அநுஸரித்த தாடகையை வதம் செய்தது. பரசுராமருடைய புண்யாத்ருஷ்டத்தை ராமஸரம் இரை வாங்கிற்று. மூன்று அடிகளிலும், முதலில் உத்க்ருஷ்டரைக் குறிக்கையில் மேலே கிளம்பியும், பிறகு அங்கங்கே நிக்ருஷ்டரைக் குறிக்கையில் கீழே குதித்துக் கொண்டும் பாடுவது.

ஹநுமானிலும் சிறந்த யோகியில்லை. அந்த மஹா யோகியின் ஸந்நிதியே இந்த ப்ரதேசத்தை ஸத்வோத்தரமாகச் செய்யக் கூடியது. ஆயினும் யாழ் குழல் ம்ருதங்கம் முதலிய ஜமாக்களோடு உயர்ந்த ஸ்வர ராகாதிகளோடு பாடிக் கொண்டிருக்கும் கந்தர்வ தம்பதிகள் நிரம்பிய இவ்விடத்தில் தவம் செய்ய ஆரம்பிப்பது உசிதமல்ல. யோகத்தின் ஆரம்ப தசையில் இருப்பவர்க்கு இவர்கள் ரூபமும் காநமும் யோகத்துக்கு விக்நமாகும். இங்கே யோகாரம்பம் செய்யத் தைர்யமும் நம்பிக்கையு மில்லை. ஆரம்ப தசையில் விஷய ஸந்நிதி இருப்பதே மிக அபாயம். மோக்ஷோபாயத்தை இப்படி ஸாபாய மாக்கலாமோ

" ஸஹஸ்வா விகீர்ணளிஹ உஉ நஹஷ்டே த்ரிஹ வநம்
வாஸ்ஸீஉஜீரஸ்வநிரவி கிஉாஜோகநஉவெ: ।
யஉரஹ்ராவஸம்வஜோ யஉிநஉநவம் உக்தஉவி வா
விகதஉ்ம் வயஉ்ராத்வொ விஜிதகஉஹம்ஸீகஉரவ: ॥

இங்குள்ள ரூப யௌவந ஸம்பந்நமான ஸ்த்ரீகளின் அடிச்
மதுரமான த்வநி ஒன்றே போதும் மாசற்ற யோகியையும் முக்தனையு
மயக்கி விஹரிக்கச் செய்ய. அந்த ஸ்த்ரீகள் வாயைத் திறந்து பாட
வேணுமோ? அவர்கள் தங்கள் நேத்ர விலாஸங்களால் பார்த்து மோஹ விகா

உண்டு பண்ணவேண்டு மென்கிற அக்கரை யில்லை. அவர்கள் ஹம்ஸ கதியாய் உல்லாஸமாய் நடக்கையில், அவர்கள் ப்ரயத்ந லேசமு மில்லாமல் தானுகவே சப் திக்கும் அடிச் சிலம்பின் த்வநியின் ச்ரவணமே போதும் யோகாரம்பம் செய் பவன் மனத்தைக் கவர. கமலபாதத்தின் அழகைப் பார்க்க வேண்டாம்; அவள் அன்ன நடையின் அழகைப் பார்க்க வேண்டாம்; அவள் இவனைப் பார்க்கவேண்டாம்; தன் த்ருஷ்டி வலைகளை இவன் பேரில் அவள் வீச வேண் டாம்; அவனையும் இவன் பார்க்கவேண்டாம்; தூரத்தில் நடந்து வருகையில் அவள் சிலம்பின் இனிய ஓசை ஒன்று போதும் காம வசமாக்க. முக்தரையும் அது விகரிக்கச் செய்யும். முமுக்ஷு அதை விலக்க வேண்டாமோ? யோகா ரூடான மாசற்ற த்ருட சித்தரையும அது கலக்குமே. "ஹம்ஸா நூபுரஸ ஶப்தாநுஸாரிணோ ஜாநாமி த்வத்கதி முபதிஷ்டா" என்று விக்ரமோர்வஶீயத்தில் மநோரதித்ததை இங்கே ஸ்வாமி ஸ்மரிக்கிறூர். 'விஜிதகளஹம்ஸகலரவ:' அவள் நடை அன்ன நடையை வென்றது. அவள் அடிச் சிலம்பின் ஓசை ஹம்ஸ த்வநியை வெல்கிறது. 'கலம்' என்பது அவ்யக்தமான த்வநி. அக்ஷரங் கள் ஒன்றும் உருப்படி யில்லாதது. அது போதும். வ்யக்தாக்ஷரங்களாய் முகத்தால் கானம் செய்யத் தேவையில்லை. பெண் ஹம்ஸங்களை ஜயிக்கும் இந்த த்வநி ஹம்ஸரான யோகிகளையும் ஜயிக்கு மென்ற ரஸம் இங்கு அநுபவிக்கத் தக்கது. ஹம்ஸிகளை ஜயிப்பது ஹம்ஸரை ஜயிக்காதோ? சிலம்பு த்வநியை வர்ணிக்கும் ச்லோகமும் த்வநி மயமாக அமைகிறது. 'யத்ருச்சாலம்பந:' இந்தச் சிலம்பு த்வநி தானுக ஒலிப்பது, அவள் நர்த்தநாத்யவஸரங்களில் வேண்டு மென்று நர்த்தந க்ரமத்தில் பாத ந்யாஸம் செய்யும்போது ஏற்படும் ஒலியல்ல. 'யமிநம் கூநவம்'-வாஸனைகளை அடியோடு அடக்கக் கூடிய மாசில்லாத யோக ஸித்தரையும்; 'ஜீவந்முக்தா'- யோக ஸித்தரை சிலர் ஜீவன் முக்த ரென்பர். 'கூநவோ ஜீவந்முக்தவத்' என்று நாமும், அவர்கள் முக்த ரல்லராயினும் அவர் களை ஒருவாறு முக்தருடன் ஒப்பவ ரென்போம். தேஹம் அடியோடு நீங்கி, பரஞ் ஜோதியில் ஸம்பந்ந ரானவரும் அபஹத பாப்மரான வருமான முக்த ரையும், அவர்கள் இங்கே 'காமாந்நீ காமரூப்யநு' என்றபடி ஸஞ்சரிக்க வருகை யில் அவர்களை விகாரப்படுத்தி விடும், அதனுல் அவர்கள் காம மயரான காம ரூபிகளாகவே ஆய்விடுவார்கள். 'கிமாபரோக நிஜ ஶஸ்த்ரை:'-1. கண்களாலே வக்ரமாய் நோக்குதல், புருவ நொடிப்புக்கள்; மந்த ஹாஸங்கள், மதுராலாபங் ..ள் முதலிய வற்றை 'ஶஸ்த்ரை:' என்பது சொல்லும். தூரத்திலிருந்து ..ணமே போதும்; பார்க்க வேண்டியதில்லை. 2. த்ருஷ்டி சரங்களால் ..ச் செய்யும் திங்கள் திருமுகங்களும் வேண்டா; பாத கமல ..் வேண்டா; அதில் தானுகவே ஒலிக்கும் சிலம்போசை ச்ரவணமே .. 'கலஹக்ஷா'- ஒரு போர் புரிய வேண்டாம்; ஓர் அடி அடிக்க ..ம்; ஒரு சரீர ஹிம்ஸை வேண்டாம்; பீடிக்க வேண்டாம்; கட்ட ..ம். ஒரு யுத்த மில்லாமல் மூன்று உலகங்களையும் ஜயித்து மந்மதன் ..லப்படுத்தி விடும்.

தர்க்கன்.—இது இருக்கட்டும்; இதோ ஸர்வ விதமான ஔஷதிகளும் ..ண்டாகும் பர்வத ராஜரான ஹிமவத் பர்வதத்தில் த்ருஷ்டியைச் செலுத்த ..ணும்.

" 𑌹𑌰𑍍𑌷𑍇 𑌮𑍈𑌨𑌾𑌕𑌜𑌨𑌕𑍋 𑌯𑌾𑌚𑌨𑍀𑌯𑍇 𑌨𑌭𑌸𑍍𑌤𑌨𑍂𑌜𑌃 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑍇𑌰𑍁𑌜𑌾𑌮𑌾𑌤𑌾 𑌤𑍍𑌰𑍍𑌯𑌮𑍍𑌬𑌕𑌶𑍍𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑍋 𑌗𑌿𑌰𑌿𑌃 ॥"

இந்தக் கிரியின் மஹிமையை என் சொல்வது? இம் மலையரசர் ராம தூதரான ஹநுமாருக்கு ஸஹாயம் செய்ய ஆசையுடன் அவரை யாசித்துத் தன்மேல் க்ஷணம் விச்ரமிக்கச் செய்த மைநாக கிரியை புத்ரனைப் பெற்றவர். உலகத்தின் க்ஷேமத்துக்காக வஸுந்தரையான பூமியை தோஹநம் செய்யுங் காலத்தில் கௌ ரூபமான பூமிக்கு அப்பொழுது ஈன்ற கன்று போலத் தாழ்ந்து சிறிய வடிவாயிருந்து ஊட்டி பாச்வதங்களான ரத்நங்களையும் மஹௌஷதி களையும் க்ரஹிக்கும்படி ஸஹகரித்தவர்; தேவர்களின் பொன் மலையான மேருவின் ஜாமாதா; இவருக்கு ஜாமாதா யாரெனில், ஸாக்ஷாத் முக்கண்ணர்; அம்மூன்று கண்களும் ச்ருங்கார மயமாக அவர் கௌரியை 'ஸஹா வஸ்தி' என்பதுபோல் பார்த்துக்கொண்டே இன்புறும்; மூன்று கண்களும் ஏக ரூபமாய் ஶீதளம்; குளிரப் பார்ப்பது. 'ஸூர்ய ஶீதளம் ... ஈதீயம்' என்று இந் நாடகத்திலேயே பாடியபடி; எரிகண்ணும் குளிர் கண் ஆயிற்று. 'முக்கண்ணர்' என்பதில் அந்த ஸமுதாயத்தி லுள்ள எல்லாக் கண் களும் ஒரே ஸ்வபாவமா யிருப்பது ரஸம்.

" 𑌉𑌮𑌾𑌮𑍁𑌖𑍇 𑌬𑌿𑌮𑍍𑌬𑌫𑌲𑌾𑌧𑌰𑍋𑌷𑍍𑌠𑍇
𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌾𑌨𑌿 ।"

[ஈச்வரர் மூன்று கண்களைம் உமையின் சந்த்ர முகத்தில் ஆநந்தமாய்ச் செலுத்தினர்] என்று குமார ஸம்பவத்தில் வர்ணிக் கப்பட்டது. 'த்ர்யம்பகர்' என்பதால் இந்த ரஸங்களின் த்வநி ஏற்படுகிறது. 'த்ர்யம்பகம்' எனும் சொல்லுக்கு முக் கண்ணர் என்பது பொருள்.

விவேகர்.— [கண்களை நாற்புறமும் செலுத்தி]

" 𑌵𑌾𑌹𑌿𑌨𑍍𑌯𑌃 𑌕𑌤𑌿 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌵𑌨𑍍𑌯𑌮𑌹𑌿𑌷𑌶𑍍𑌰𑍇𑌣𑍀𑌵𑌿𑌷𑌾𑌣𑌾𑌹𑌤𑌿-
[illegible] ।
𑌵𑌾𑌰𑌿𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑌦𑍇𑌵𑌯𑍋𑌷𑌿𑌦𑍁𑌰[illegible]-
[illegible] ॥"

காட்டெருமை வரிசைகளின் கொம்புகளால் அடிக்கப்படுவதால், முழங்கால் ஜலத்தில் அடியிலிருந்து கிளறப்படும் சேற்றின் மிகுதியால் சேறு மயமாயிருக்கும் குட்டைகள் மட்டுமே நிரம்பியதும், மற்றப்படி வற்றியிருப்பது மான எத்தனை ஆறுகள் இல்லை! அந்த ஆறுகளோ டொக்கப் பேசுவதைக் கங்காநதி ஸஹிக்கு மோ? அந்தக் கங்கா நதி ஸ்வச்ச ஸ்வச்ச மாயினும், அதிலும் சேற்றுக் குழம்பு கள் உண்டு; ஆனல் அந்தக் குழம்பு, கேஸரி கர்ப்பூர சந்தநக் குழம்பு. அது, ஜலக்ரீடை செய்யும் ஸ்வர்க்க ஸ்த்ரீகளின் மார்புகளிலும் ஸ்தநங்களிலும் பூசியுள்ள வராஹ ருதிரம் போன்ற ஸுகந்தி சந்தநச் சேறு. அவர்கள் மார்பில் பூசிய அக்குழம்பு அவர்கள் ஜலக்ரீடை செய்கையில் நதீ வேகத்தில் களந்து ஓடி வருகிறது. அவ்வாறு ஓடிவரும்போது அவர்கள் மேனி ஸுகந்தத்தையும் சேர்த்துக் கொண்டு வருகிறது. மற்ற ஆறு குட்டைகளில்

மஹிஷங்களும் மஹிஷிகளும், தம் கொம்புகளினல் ஆழமில்லாத ஜலத்தில் அடித்துக் குட்டையிலிருந்தே கிளப்பி மேலே கொண்டுவரும் சேறு. கங்கையில் ஸ்வர்க்க மஹரிஷிகள் பர்வத ச்ருங்கம் போன்ற ஸ்தநங்களிலிருந்து நதீ வேகத்தால் அடித்துக்கொண்டு வரும் சந்தநச் சேறு. கங்கா நதியில் அடியிலோ மேலோ சேறு கிடையாது. இந்த் மஹிஷிகள் சந்தநக் குழம்பே பங்கம்; நதீ மேலே சேறு; 'ஸௌதாங்கம்' என்பது அந்த:புரம்; ரூடிப் பெருளைத் தான் கொள்ள வேணும். ஹ்ருதய மென்று மந்தம், எல்லாம் காமகலுஷம். விரக்தராயிருப்பவர் முன் சொன்ன மஹிஷிகளையும் இந்த மஹிஷிகளையும் ஏக ரூபமாய் நினைக்கலாம். 'ஸீமந்திநீ'—இவர்கள் கந்தங்களை வாரி நந்தநவந பாரிஜாத புஷ்பங்களைச் சூட்டி முடிந்திருக்கும் கூந்தல்கள் அவிழ்ந்து, ஸௌகந்தி பாரிஜாத புஷ்பங்களும் அந்தச் சேற்ரேடு கூடி வருகின்றன வென்று த்வநி. அந்தச் சேறு காலில் பட்டால் காலைக் கடிவுவர் இந்தச் சேற்றை உடம்பெல் லாம் பூசிக்கொள்வர். அந்தச் சேறு ஜலத்தைத் துர்ப்பக மாக்கும்; இந்தச் சந்தநக் குழம்புச் சேறு ஸுபக மாக்கும். இதை 'ஸுஹரா' என்னும் பதம் விளக்குகிறது. 'ஸம்ஸாரவஹா'—'சூவஹா' என்பது நதிக்குப் பெயர்; ஜலம் ஸதா ஓடிக்கொண்டே யிருக்க வேணும். முன் சொன்ன ஆறுகள் வற்றி மணலாகவே இருக்கும். எங்கேயாவது ஜலம் குட்டையாகத் தேங்கி யிருக்கும்; ஜலம் ஓட்டமிராது. 'சூவஹா' என்பது அவற்றுக்கு ரூடிப் பெயரே. 'வாஹிநீ' என்றும் நதிக்குப் பெயர். ஜலம் ப்ரவாஹமாய் ஓடிக்கொண்டே யிருக்கும். அந்த ஆறுகளுக்கு 'வாஹிநீ' என்ற பெயர் மட்டும்தான். 'வந்யமஹிஷ ஸ்ரேணீ விஷாணாஹதி' இங்கே சாகுந்தலத்தில் அரண்யத்தில் வேட்டையை வர்ணிக்கும் ப்ரஸ்தாவத்தில், "காஹந்தாம் மஹிஷா நிபாநஸலிலம் ச்ருங்கைர் முஹுஸ் தாடிதம்" என்ற ச்லோகத்தையும் அதைப் பற்றிக் காவ்யாலங்கார ஸூத்ர வ்ருத்தியில் வாமநர் எழுதியிருப்பதையும் இங்கே ஸ்வாமி நினைக்கிருர். அங்கே 'மஹிஷா:' என்றது வந்ய மஹிஷங்களை; அவை காட்டெருமைகள்; நாட்டெருமைகள் அல்ல; நாட்டெருமைகளை வேட்டையாட மாட்டார்.

"சுயமிஹ விஷயஸ்ஸௌக்ய ஞாநம்
ந பவதி ஸம்யமி ஞாநிவாஸயோக்ய: ।
ஸரித்வர ஜாநீ நிபாதகோஷை
ர்முநிவர தத்த நமனோ ஹிமாத்ரி: ॥"

இந்த ஹிமய பர்வதம் தாரணு த்யாநம் ஸமாதி என்ற மூன்றும் சேர்ந்த ஸம்யமத்தை அப்யஸிக்கும் ஆருருக்ஷுக்களுக்குத் தபஸ்ஸுக்கு யோக்யமான ஸ்தாந மல்ல. 'விஷய:' என்று ப்ரதேசத்தைக் குறித்தது அழகு. முன் ச்லோகத்தில் சொன்ன சந்தநக் குழம்புச் சேறுகள், விஷயிகளுக்குத்தான் பிடிக்கும். பகவானுடைய திருவடி தீர்த்தமான மிகப் புநித கங்கா நதீ தீர மாயினும், இங்கே கங்கை மலைக்குகைகளிலிருந்து கீழே வேகமாய் ஓயாமல் மிக்க கோஷத்துடன் விழுந்துகொண்டிருக்கிறது. இந்த ஓயாத இரைச்சலில் யோகாப்யாஸம் செய்வது துஷ்கரம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

எவ்வுள் கிடந்தான் எழில்

ஆழ்வார்களால் பாடப்பெற்றுத் திவ்ய தேசங்கள் எனவும் திருப்பதிகக-ளெனவும் பெயர் பூண்டு விளங்கும் பதிகளுள் திருவெவ்வுளூர் (திருவள்ளூர்) என்பதும் ஒன்று. அத்தலம் இப்போது இரட்டைத் திருப்பதியாக விளங்குகிறது, சிங்கவேள்குன்றத்து எம்பெருமான் ஒருவருடைய ஸாந்நித்யமும் சேர்ந்தபடியால். சென்னைமா நகரியுள்ளோருடைய பாக்யவிசேஷ மென்றே சொல்லவேண்டும் இச்சேர்த்தியை. வெகு ஸமீபத்திலுள்ள இத்திவ்ய தேசத்திற்குச் சென்று இரண்டு எம்பெருமான்களுடைய இன்னருளுக்கும் இலக்காகி, ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ அழகிய சிங்கருடைய திவ்ய ப்ரஸாதங்களையும் பெற்று க்ருதார்த்தர்களாக இச்சென்னை நகர ஆஸ்திகர்களுக்கு ஒரு பெரு நன்னலம் வாய்த்திருக்கிறது.

"தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்ற" மென்று பரம தீரரான பரகாலனும் பாடிப் போந்த திவ்ய தேசத்தைச் சார்ந்த ஒரு எம்பெருமான், சென்ற சில வருஷங்களாகப் பெரும்பாலும் தென்னிந்தியா முழுவதும் ஸஞ்சரித்து, அங்கங்கே அடியார் குழாங்களுக்கு அருள் புரியும்படி உபகாரம் செய்துவரும் ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர் திறத்து அனைவரும் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்ய ப்ராப்தம். இம்மஹா புருஷன் நமது ஸம்ப்ரதாயத்திற்குச் செய்துவரும் மஹத்தான மஹோபகாரங்களில் இது ஒன்று.

இவ்வர்ஷம் ஸங்கல்பத்திற்காக ஸங்கலபித்துக்கொண்ட ஸ்தலமும் பல்வேறு விதங்களிலும் பாராட்டற்குரிய ஒரு புநிதப் பதி. மஹா வரப்ரஸாதியான ஸ்ரீ வீரராகவப் பெருமாள் அதிஷ்டாநம் செய்தருளும் திவ்ய க்ஷேத்ரம். சாலிஹோத்ர மஹர்ஷிக்கு இடைவிடாது அருள் புரிந்துகொண்டிருக்கும் எவ்வுள் கிடந்தானுடைய திவ்ய சயந ஸேவையும், உபய நாச்சிமார்களுடன் கூடி அடியவரை வாழ்வித்துவரும் ஸ்ரீ வீரராகவப் பெருமாளுடைய அத்புதமான வடிவழகும், வேண்டுவார் வேண்டிற் றெல்லாம் வழங்கும் ஸ்ரீ கனகவல்லித் தாயாரின் ஆஹ்லாதகரமான ஆபிரூப்யமும், இத்தலத்தை அடைந்த பேருடைய கண்களையும் மனத்தையும் வசீகரித்து இன்புறச் செய்வன.

இவற்றுள் உத்ஸவ மூர்த்தியான வீரராகவப் பெருமாளுடைய திருமேனி ஸௌந்தர்யம் விசேஷித்து அநுபவிக்கவேண்டிய அம்சம். உத்ஸவ காலங்களிலே பலபல ஆபரணங்கள் பூண்டு, பலபல திருக்கோலங்களுடன் காட்சியளிக்கும் அழகை அள்ளிப் பருகி ஆநந்திக்கும் பேர்கள் அநந்தம். உத்ஸவங்களுக்காகத் திருவீதிகளை அலங்கரித்தருளிப் பின்னர் தமது திருக்கோயிலிலே கண்ணாடி அறையில் 'தூவடிவில் பார்மகள் பூமங்கையோடு சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்றக் காவடிவில் கற்பகமே போலநின்று கலந்தவர்

கட் கருள்புரியும்' இன்பக்காட்சி வர்ணிக்கைக்கு நிலமல்ல. அதை அருகிருந்து நேரில் அநுபவித்தபேர்களே நன்கறிவர். இலேசாக ஒரு பீதாம்பரத்தையோ, அல்லது வேறு ஸாதராவையோ, அல்லது கரைசேர்த்த ஒரு திருப்பரிவட்டத்தையோ திருமேனியில் சாத்திக்கொண்டு திருவரைஞாண் திருமுப்புரிநூல் (யஞ்ஜோபவீதம்) தவிர வேறு திருவாபரணம் இல்லாமல், ஒரு கையில் சங்கு ஒருகைமற் றாழியேந்தி சற்றே ஏறுமாறுன திருவடிகளுடன் ஸாதிக்கும் ஸேவையை என்னென்று எடுத்துரைப்பது! 'கண்டு களித்து இன்புற்றிடச் சேரவாரும் சகத்தீரே!' என்று அனைவரையும் கூவி அழைத்து அவர்களுடன் சேர்ந்து இந்நல் விருந்தைக் கண்களால் கண்டு உள்ளத்தால் ரஸித்துப் பரிபூர்ண ப்ரஹ்மாநுபவத்தை இப்பூமண்டலத்திலே எய்த நம் எல்லோருக்கும் ப்ராப்தம்.

பெருமாளுக்கு வீரராகவன் என்று பெயர். "ஶத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்றபடி பகைவரை வெருவச் செய்யும் வீரமல்ல. "ஸ ஜஹார தவ நம் வீர: ப்ரதிஜ்ஞாம் அநுபாலயந்" என்றபடி த்யாகத்திற்கான வீரமு மல்ல. "பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம" என்று தாம் விபவதத்தில் விவரித்த வீரம்தான் இப்போது அர்ச்சையில் இந்த ப்ரபு ஆவிஷ்கரிப்பது. அன்றேல், நமக்கு அணுக அவகாச மேது? அபராதம் புரிவதுவே தொழில் என்று அதில் தீக்ஷிதரான நம்மையும் ரக்ஷிக்க ஸக்ருத் ப்ரபந்ந ஜநஸம்ரக்ஷண தீக்ஷையைத் தாம் மேற்கொண்டபடியைத் தம்முடைய ப்ரத்யங்கத்தாலும் தோற்றுவிக்கும் இன்ப மூர்த்தியாவர்? இவ்வண்ணமே "நித்யா பராய ஸகிதே ஹ்ருதயே தீயே த்வத்தாஶயம் ஸ்வாந்தி தக்ஷிண பாணிபத்மம்" என்று நிகமாந்த மஹாதேசிகன் வேறு திவ்யதேசத் தெம்பெருமான் விஷயமாய் அநுபவித்திருக்கும் வண்ணம் ஸ்ரீ வீரராகவன் அபயஹஸ்தமும், மிகுந்த அபயத்தையும் தைர்யத்தையும் பாப மேலீட்டினுல் நடுங்கிக் கிடக்கும் நமதுள்ளத்தில் விளைவிக்கிறது. திருமுகமண்டலமோ இன்னும் பன்மடங்கு தைர்யத்தையும் ஆஹ்லாதத்தையும் அளிக்கிறது. இந்தப் பெருமாளை ஸேவிக்கும் போதெல்லாம் "பஹவோ ஸாஹாய்யமிச்சந்தி ஶோக நாஶநாம் விபவிஷு" என்று விபீஷணுழ்வானைச் சக்ரவர்த்தித் திருமகன் வரவேற்ற பாசுரம் அடியேனுக்கு நினைவு வரும். அத்தனை ஆதராதிசயம் திருமுகத்தில் தோன்றுகிறது. பெரு மிடுக்குடன் வரவேற்கும் சில ப்ரபுக்களைப் போலல்லாது நம் வரவால் பெரும்பய னெய்தியது தானேயன்றி நாமல்ல என்ற நினைப்புடன் குளிர்ச்சியாய் ஸ்வாகதம் கூறும் திருமுக மண்டலம் வேறிடத்தில் காணக் கிடைக்கா தென்றே சொல்லலாம். பரந்த நெற்றி, குனித்த புருவம், கனிந்த கடாக்ஷம், மலர்ந்த புன்முறுவல். ஒருதரம் ஸேவித்தால் மறக்கவொண்ணுத முகவெட்டு. இன்பம் பயக்கும் இத்தனையாலும் ஸேவிப்போர் மனங்களை மையலேற்றி மயக்கும் மாய மந்திரம்போலும் இப்பெருமானது திருமுகம் என்று நினைக்கச்செய்யும் ஸமுதாய ஶோபை.

நமது பாபங்களைப் போக்கி நம்மை வாழ்விக்க ஒரு நல்ல சூழ்ச்சி இது. இப்படி சுபத்வமும் ஆச்ரயத்வமும் ஒருங்கே தோன்றக் கிடப்பதால்தானே இம்மாதிரி திவ்யமங்கள விக்ரஹங்களுக்கு சுபாச்ரயங்க ளெனப் பெரியோர் பெயரிட் டிருக்கின்றனர். ஶாஸ்த்ரத்திற்குக் கட்டுப்படாவிட்டாலும், நாம் இந்

த்ரியங்களுக்குக் கட்டுப்பட்டவர்களென்பதை மறுக்க முடியாது. அந்த இந்த்ரியங்களுக்கே இன்பம் பயந்து நம்மை அங்கீகரிக்கிருன் வீரராகவன். அதுதான் அவனது வீரம். "வாவஊாயெஉண யொ ஹஷி ஸவீ௱:" பாபியை ஒழிப்பது வீரத்தன மன்று; பாவத்தை ஒழிப்பதுதான் வீரம் என்று அன்று விபவத்தில் அவனறுதியிட்ட அழகை இன்று இவன் அர்ச்சையில் அநுஷ்டித்துக் காட்டுகிருன்போலும்! இந்த்ரியங்கள் சிற்றின்பத்தை நுகர்வதால் பாபம் விளைகிறது. இன்ப நுகாச்சியை ஒழிக்காது நுகரப்பட்ட இன்பத்தின் தாச்ழ்சியை மட்டும் ஒழித்து நம்மைப் பாபத்தில் சிக்கவொட்டாது செய்கிருன். இதுவன்ரூ உதவி! இதுவன்ரூ வீரம்! இவனன்ரூ புருஷோத்தமன்! இவனன்ரூ வீரராகவன்! இவனுடைய இந்த வீரத்திற்கு நாம் நம்மைத் தோற்கவேண்டாவோ? 'ஜிதந்தெ' என்று அவன் திருவடிகளில் வீழ்ந்து இத்தனைகாலம் அவனை அநாதரித்துப் போந்த பிழைக்குப் பரிஹாரமும் மன்னிப்பும் வேண்ட வேண்டாவோ? இவ்வளவிலும் நமக்கு உறுதியும் நம்பிக்கையும் விளையாவிடின் வாத்ஸல்யமே வடி கொண்ட ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹப் பெருமானும் பரம தயாளுவான ஸ்ரீமத் அழகியசிங்கரும் அருகே எழுந்தருளியிருக்கும் இச்சமயத்தையாவது தப்பிவிடாது அங்குச் சென்றணைந்தோமாயின், நமது தீராத வினைகளெல்லாம் தீர்ந்து நாம் அவர்கள் அனைவரது திருவருளும் பெற்று உய்வது திண்ணம்.

தி. ராமஸ்வாமி தாஸன்.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

வ்யயஸு புரட்டாசிமீ

1உ	செவ்வாய்க்கிழமை ...	சூந்யதிதி: ஷடசீதி
2உ	புதன்கிழமை ...	கந்யா க்ருஷ்ண அஷ்டமி திதி: மத்யாஷ்டமி: மஹா வ்யதீபாதம்
5உ	சனிக்கிழமை ...	ஸர்வ ஏகாதசி
7உ	திங்கட்கிழமை ...	கந்யா க்ருஷ்ண த்ரயோதசி திதி
8உ	செவ்வாய்க்கிழமை ...	,, ,, சதுர்த்தசி திதி
9உ	புதன்கிழமை ...	ஸர்வ [மஹாலய] அமாவாஸ்யை
10உ	வியாழக்கிழமை ...	கந்யா சுக்ல ப்ரதமை திதி; நவராத்ரி உத்ஸவாரம்பம்
15உ	செவ்வாய்க்கிழமை ...	ஸ்ரீமதாதிவண் சடகோப மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
18உ	வெள்ளிக்கிழமை ...	மஹா நவமி: ஸ்ரீ ஹயக்ரீவாராதநம்:
19உ	சனிக்கிழமை ...	விஜய தஶமி
20உ	ஞாயிற்றுக்கிழமை ...	ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்: ஏகாதசி திதி
21உ	திங்கட்கிழமை ...	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம்
29உ	செவ்வாய்க்கிழமை ...	கந்யா க்ருஷ்ண பஞ்சமி திதி
30உ	புதன்கிழமை ...	கந்யா க்ருஷ்ண ஷஷ்டி – ஸப்தமி திதி த்வயம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அபுநராவ்ருத்தியைப்பற்றிய ஸந்தேஹ பரிஹாரம்

(1)

(ஸ்ரீ உப. தி. ஈ. சடகோபாசார்யர், அட்வோகேட், திருப்பாப்புலியூர்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

மற்ெருரு நிர்வாஹம் ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியால் ரத்நபேடிகை என்கிற தமது ஸித்தாஞ்ஜந வ்யாக்யாநத்தில் அவலம்பிக்கப்பட் டிருக்கிறது. 'பரமபத' சப்தத்தை முக்த ப்ராப்யமான ஸ்தாந விசேஷமென்றே வைத்து அந்த ஸ்வாமி பின்வருமாறு ஸாதித்திருக்கிருர் :—

"யத்யபி விஹாயஸா அர்ச்சிராத்யுபஹ்ரம் ப்ராப்யதே தத்ராப்யக்ஷராமார்க்கேணாபி பரப்ரஹ்மாஸந்நதேசாப்யம் ஸம்ருத்தம் ப்ராப்யதாம் அபுநராவ்ருத்தி ந ஸாத்யேத ததாபி யாத்ருசசாஸ்த்ரேண பரமபதம் ப்ராப்யதாம் அபுநராவ்ருத்தி ந ஸாத்யதி தத்ர ஸித்தசாஸ்த்ரேணைவ வைதிகமார்க்காணாம் பரமபதப்ராப்திரிதி அபுநராவ்ருத்தி ப்ரமாணஸித்தேதி ந காசித் அநுபபத்தி:"

[இதன் தாத்பர்யம்:—'அநாவ்ருத்திஶ்ஶப்தாத்' என்கிற ஸூத்ரத்தில் தீர்மானிக்கப்பட்டபடி அபுநராவ்ருத்தி சாஸ்த்ரைக ஸமதிகம்ய மாகையால், 'ஸ கல்வேவம் வர்த்தயந்' இத்யாதி ச்ருதிகளிலும் ததநுஸாரியான பகவச் சாஸ்த்ராதிகளிலும் எந்த ஆநுபூர்வியில் அது விதிக்கப்பட்டிருக்கிறதோ, அதைத் தவிர்த்து மற்ற வகையில் திவ்யலோக ப்ராப்தி ஏற்பட்டபோதிலும் புநராவ்ருத்தி ஸம்பவிக்கலாம்.] யேநகேநாபி ப்ரகாரேண, திவ்யலோக கமநம் புநராவ்ருத்தி நிவாரக மாகமாட்டாது. அப்படிக்கு வசநம் கிடையாது. கிந்து: பக்தி ப்ரபத்தி அந்யதரவித்யா நிஷ்பத்தி பலமாக ஏற்பட்ட பகவத் ப்ரஸாத விசேஷத்தால் அந்திம ஸ்ம்ருதி பிறந்து விமுக்த கர்ம பந்தனாய் மோக்ஷம் செல்லும் அதிகாரிக்கு மாத்ரமே புநஸ்ஸம்ஸார ப்ராப்தி ஸர்வதா கிடையாதென்று சாஸ்த்ரங்கள் அறுதியிடுகின்றனவே. தவிர: மற்ற வகையில் யாராவது பரமபதம் போகக்கூடு மென்று வைத்துக்கொண்டாலும், எப்படி 'நெருப்பு' என்று சொன்ன மாத்ரத்தில் வாய் வெந்துபோகாதோ, அப்படியே புநராவ்ருத்தி சங்கை தீராது. ஆகையால் 'பரமபத' சப்தத்தை லாக்ஷணிக மாக்கி க்லேசப்படுத்தாமலே அது முக்ய வ்ருத்தியென்று அப்புபகமம் பண்ணியே சாஸ்த்ர விரோத மில்லாமல் நிர்வஹிக்கலாம் என்பதுதான் ந்யாய சாஸ்த்ர நிபுணரான இந்த வ்யாக்யாதாவின் ஆசயம். ஸம்ஸார ப்ராப்தி கர்மாதீந மாகையால், கர்ம நிவ்ருத்தி ஏற்படாத வரையல் எந்த ஸ்தாநத்தி லிருந்தபோதிலும் ஸம்ஸாரம் விடாது. கர்ம நிவ்ருத்தி நிச்சேஷமாய் ஏற்பட்டு விட்டால், ஸம்ஸார ப்ராப்தி எங்கும் எக்காலமும்

கிடையாது என்பதுதான் ஶாஸ்த்ரார்த்தம். இதை உத்தேசித்தே ஸ்ரீ தேசிகன் பரமபத ஸோபாநத்தில் "இவ்வர்ச்சிராதி கதியாலப் போனவர்கள் ஆவர்த்தியார்கள் என்கிறது ஸர்வலோகாது ஸஞ்சரண ச்ருதி பலத்தாலே ஸம்ஸரியார்கள் என்றதா மத்தனே. வைதிகன் புத்ராதிகள் இவ்வர்ச்சிராதி கதியாலே தேச விசேஷ ப்ராப்தி பெற்றவர்க ளல்லாமையாலே அவர்களை மீட்டது விருத்த மன்று" என்று சேர்த்து அருளிச்செய்திருக்கிறார். இதைப்பற்றி [ஆடிமீ த்து ஸஞ்சிகையில் 164-வது பக்கத்தில்] ஸம்பாதகர் 'உபாயாநுஷ்டாநம் செய்து தேசவிசேஷ ப்ராப்தி யில்லாமையாலே' என்று இங்கு தேசிகன் ஸாதிக்காமல், 'அர்ச்சிராதியாலே' என்று விசேஷித்துச் சொல்வதின் ப்ரயோஜந மென்ன?' என்று ப்ரச்நம் செய்திருக்கிறார். இதற்கு ஸமாதநம்:—

ஸோபாநத்தில் இது அர்ச்சிராதி ப்ரகரண மாகையால், அந்த கதியின் ப்ரபாவத்தைச் சொல்ல வந்த விடத்தில் உபாயாநுஷ்டாநத்தை முக்யமாக வைத்துப் பேசுவது யுக்தமாகாது. அர்ச்சிராதி கதியைக் குறித்தால் தத்பூர்வாவச்யம் பாவியான உபாய நிஷ்பத்தி, அந்திம ஸ்ம்ருதி, ப்ரம்ஹ நாடீ த்வாரா உத்க்ராந்தி, கர்மபந்த விநிர்மோக்ஷம், எல்லாம் ச்ருங்க க்ராஹிகா ந்யாயத்தில் ஸங்க்ரஹீதமாவதால், ஒவ்வொன்றையும் குறிக்கவேண்டிய அவச்யமில்லை யென்பது தாத்பர்யம். மேலும் இங்குள்ள வசநவ்யக்தி கொஞ்சம் கவனிக்கத்தக்கது. 'முக்தன் ப்ராக்ருத லோகத்திலும் ஸஞ்சரிப்பவன்' என்ற ச்ருதிவாக்யம் அபுநராவ்ருத்தி வாக்யத்துடன் விரோதியாது; எனென்றால்: புநராவ்ருத்தி யென்பது புநஸ்ஸம்ஸார ப்ராப்தியைக் குறிக்கிறது என்று நிர்வஹித்ததைக் கொண்டே கர்மபந்த விமோக்ஷம் ஏற்பட்டுவிட்டபடியால், இவ்வதிகாரிக்கு மறுபடியும் கர்மாதீநமான ஸம்ஸார ப்ராப்தி கிடையாதென்று சொன்னதாயிற்று. அதற்கடுத்தாற்போல் கர்ம ந்தம் விடாதவனுக்கு ஸம்ஸார ப்ராப்தி ரூப புநராவ்ருத்தி நேர்ந்தே தீரும் என்பதை வைதிகபுத்ர த்ருஷ்டாந்தத்தால் ப்ரதர்ஶிக்கிறார்.

இங்குள்ள வைதிக புத்ராதிகள் 'இவ்வர்ச்சிராதி கதியாலே தேச விசேஷ ப்ராப்தி பெற்றவர் களல்லா மையாலே இவர்களை மீட்டது விரோதியாது' என்கிற வாக்யத்தில் ஒவ்வொரு பதமும் ப்ரயோஜநவத் தென்பது அவதானிக்கத் தக்கது. 'வைதிக புத்ராதிகள்' என்பதில் 'ஆதி' சப்தத்தால் அவர்கள் இருந்த இடத்திற்குச் சென்ற அர்ஜுநன், அவதார ரூபத்துடன் கூடிய க்ருஷ்ணன், அவரது ரதவாஹிகளான அச்வங்கள், ஸாரதி முதலியோர், வைகுண்டம் போய் வந்ததாகப் புராணங்களிற் கூறப்படும் ப்ருகு நாரதர் முதலியவர்கள், ஆகிய இவர்களும் ஸங்க்ரஹிக்கப்படுகிறார்கள். இதனால், இவர்களும் வைதிக புத்ரர்களும் ஏகராசியில் சேர்ந்தவர்க ளாகையால், மீண்டு வந்தது உபபந்நமே யென்பது தாத்பர்யம். மேலும், வைதிக புத்ரர்கள் தங்களுடைய முன் ரூபத்துடனே திருப்பி அனுப்பப்பட்டதாகப் பாகவதத்தில் இருப்பதால், அவர்களுக்கு உத்க்ராந்தி யென்பதே கிடையா தென்றும், அவர்கள் இறந்ததாக ஒரு தோற்றம் பகவந் மாயையால் ஏற்பட்ட தென்றும் தெரிகிறது. ஆகையால் இவர்கள் விஷயத்தில் புநராவ்ருத்தி சப்தமே நிரவகாச மென்று திருவுள்ளம் பற்றி 'இவர்களை மீட்டது விரோதியாது' என்று

ஸ்வாமி அருளிச் செய்திருக்கிறார். 'தேஶ விஶேஷம்' என்று மட்டும் ஸாதித் திருப்பதால், அது முக்த ப்ராப்யமான ஸ்தாநமே யென்று சொல்வது யுக்த மல்ல. அது எதுவா யிருந்தாலும் இருக்கட்டு மென்று நினைத்தே இப்படிப் பொதுவாக ஸாதித்த தென்று தோன்றுகிறது. 'ப்ராப்தி' சப்தத்தை இங்கு நிஷேத ஸ்தலத்தில் ப்ரயோகித்து, ஸித்தாஞ்ஜநத்தில் அப்யுபகம ஸ்தலத்தில் 'கமந' ஶப்தத்தை ப்ரயோகித் திருப்பதால், இரண்டுக்கும் பேதமுண் டென்று ஸ்வாமியின் அபிப்ராயம்போல் ஏற்படுகிறது. 'ப்ராப்தி' என்பது சிராவ ஸ்தாநம்; 'கமநம்' என்பது தாத்காலிக ஸம்பந்த மாத்ரம் என்று கொண்டே இப்படிப் பிரித்து அருளிச் செய்திருக்கவேணு மென்று ஊஹிக்க இடங் கொடுக்கிறது. ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்க மென்று இந்த ப்ரகரணத்தில் எடுத்திருப்பதும் ஸம்பந்த மாத்ர மென்பது தான் விவக்ஷிதம் என்பதை த்ருடீ கரிக்கிறது. ஆகையால் இந்த வாக்யத்தில் ஸ்வாமி வைதிக புத்ரர்களுக்கு அர்ச் சிராதி கதியுமில்லை தேஶ விஶேஷ ப்ராப்தியு மில்லை என்றே அபிப்ராயப் பட்டிருப்பதாகச் சொல்லுவது யுக்தமே யாகும். இங்கு அர்ச்சிராதி கதியைக் குறித்தது மோக்ஷ ப்ராபகமாக ஶாஸ்ரங்களிற் கூறப்பட்ட மற்ற மார்க்கங் களுக்கும் உபலக்ஷண மென்று ஸ்ரீ. உப. புத்தன்கோட்டகம் ஸ்வாமி ஸாதித் திருப்பது உபபந்நமே. இதற்கு முன் முமுக்ஷுவுக்கு ப்ரம்ஹ கார்ய நிஷே வணிதிகள் சொல்லியிருப்பது அதிகாரி விஶேஷ விஷயம் என்றும், அதே ரீதியில் மற்ற விஶிஷ்டாதிகாரிகள் விஷயத்திலும் நிர்வஹிக்க வேண்டிய தென்றும் கூறப்பட்டிருப்பதால், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதித் திருக்கிற க்ரமத்தில் ச்ருதி ஸித்தமான அர்ச்சிராதி மார்க்கம் ஸாமாந்யமாய் மோக்ஷ காமிகளுக்கு ஏற்பட்ட தென்றும், மார்க்காந் தரங்கள் தத்தத் ஶாஸ்த் ரோக்த க்ரமத்தில் தத்தத் அதிகாரி விஶேஷங்களுக்கு ஏற்பட்ட தென்றும், ஆனால் அவை யெல்லாம் அபுநராவ்ருத்தி பலங்க ளென்றும் நிர்ணீதமான படியால், இம்மார்க்கங்களில் எதையும் அவலம்பிக்காதவர்கள் திவ்ய தேஶம் போவதாக அப்யுபகமம் பண்ணின போதிலும், அபுநராவ்ருத்தி நிர்ப்பந்த மிருக்க ந்யாய மில்லை யென்பது தேறி நிற்கிறது. ஆகையால் இந்த ஸோபாந வாக்யத்துக், 'அர்ச்சிராதி மார்க்கமாய்ப் போனவர்களுக்கு மட்டுமே புநராவ்ருத்தி கிடையாது; மற்ற மார்க்கங்களால் செல்பவர்களுக்குப் புநராவ்ருத்தி ஸம்பவம் உண்டு' என்று தாத்பர்யம் கல்பிப்பது வசந வ்யக்திக் காவது அர்த்த ஸ்வாரஸ்யத்துக்காவது ஶாஸ்த்ரத்துக் காவது இசையாது. மோக்ஷ ப்ராபகமான மார்க்காந்தரங்களை விஶிஷ்டாதிகாரி விஷயமாக ஏற்கெனவே சொல்லி விட்டபடியால், இந்த ப்ரகரணத்துக்கு விஷய பூதமா னதும் ஸமாந்யாதிகாரிக்கு இசைந்ததுமான அர்ச்சிராதி கதியை இங்கு உதாஹரித்தார். வைதிக புத்ராதிகள் மார்க்தாந்தரங்களுக்கு உரிமையுள்ள விஶிஷ்டாதிகாரிகள் அல்லாமையாலே அவைகளை இங்கு ப்ரஸ்தாவிக்க ப்ரஸக்தியில்லை. அல்லது இதை உபலக்ஷணமாகவும் வைத்துக் கொள்ளலாம். வைதிக புத்ரர்கள் பகவானுடைய ஸங்கல்ப விஶேஷ மடியாகச் சிறிதுகாலம் மறைத்து வைக்கப்பட்டது மாத்ரமே யன்றி அவர்கள் ஶரீர வியோகாநந்தரம் லோகாந்தரத்தைக் குறித்து உத்க்ரமித்தாகச் சொல்லப் பொருந்தா தாகையால்,

189225

அவர்கள் மறைந்த ப்ரகாரத்தை ஒரு மார்க்க மென்று வ்யவஹரிப்பதே யுக்த மாகத் தோன்றவில்லை. அது அமார்க்க மென்று சொன்னாலும் தப்பித மாகாது. இதைக் குறித்து ஆனிஸ்ரீ. த்து ஸஞ்சிகை 148-வது பக்கத்தில் "வைகுண்டத்தை அடைந்திருந்த வைதிகன் புத்ரர்களை" இத்யாதியாக வரைப்பட்ட ஶங்கா வாக்யம் அநுவதாங்கத்துக்குள் (within quotation marks) போடப் பட்டிருந்தாலும், ஸோபந வாக்ய மல்லாதபடியால் ஸம்பாதகர் தாமே உத்ப்ரேக்ஷித்து எழுதியதாகவே தோன்றுகிறது. அதில், 'வைகுண்டத்தை அடைந்திருந்த' எனும் இரண்டு பதங்களும், நாம் முன் கூறியபடி ஸோபந வாக்யாஶயத்துக்குப் பொருத்த முள்ளவை யல்ல. வைகுண்ட ஶப்தம் ஸ்வாமியின் அபிப்ராயப்படி ஸமாந்ய வாசியா யிருந்தால் பாதகமில்லை. ஸம்பாதகர் இதை முக்த ப்ராப்யமான தேஶ விஶேஷத்தைக் குறிப்பதற்காக எண்ணியே ப்ரயோகித்திருக்கிறு ரென்பது ஸ்பஷ்டம். தவிர: 'அடைந்திருந்த' என்கிற பதமும் உபபந்நமல்ல. பகவானுடைய ஸங்கல்ப விஶேஷத்தால் ஸ்தலாந்தரத்துக்குக் கொண்டுபோய் வைக்கப்பட்ட பிள்ளைகள், தங்களுடைய வித்யையினாலாவது ஶக்தியினாலாவது அத்தேஶம் போகாமலிருக்க, அவர்களே அத்தேசத்தைப் போய் அடைந்தது போல் தோற்ற முண்டாகும்படி கூறியிருப்பது யுக்தமாகத் தெரியவில்லை. ஆடிஸ்ரீ. ஸஞ்சிகை 164-வது பக்கத்தில், 'பகவதவதாரங்களில் அம்மாதிரியான ஸம்பந்தம் ஏற்படுவது பகவானுடைய விலக்ஷண ஶக்தி விஶேஷத்தாலன்றோ? அப்படிப்பட்ட விலக்ஷண ஶக்தி ஹீநர் விஷயத்தில் அது ஸாத்யமாகுமோ?' என்று ஆக்ஷேபித்திருப்பது நம்முடைய ஶங்கையை த்ருடீகரிக்கிறது. பிள்ளைகள் தம் சக்தியால் போகாமல் பகவானுடைய விலக்ஷண ஶக்தியினாலேயே கொண்டுபோகப்பட்டார்க ளென்பது புராண ஸித்தமாக இருக்க, அவர்களுடைய ஶக்தி ஹீநதையைப் பற்றிய ப்ரஸ்தாவம் உபபந்நமாக மாட்டாது. இதுபற்றியே அவர்கள் போன ப்ரகாரத்தை, ஒரு கதிவிஶேஷ மென்றாவது மார்க்க விசேஷ மென்றாவது வ்யபதேஶித்து, மோக்ஷாதிகாரிகள் செல்லும் மார்க்கங்களுடன் விகல்பித்துப் பேசுவதே அநுசித மாகும்.

மற்றொரு விஷயம் இங்கு ப்ரஸ்தாவிக்கவேண்டி யிருக்கிறது. ஆடிஸ்ரீத்து ஸஞ்சிகை 164-ம் பக்கத்தில் பின்வரும் வாக்யங்கள் காணப்படுகின்றன:— "ப்ராக்ருத ஶரீரத்துடன் அப்ராக்ருத தேஶத்துக்குப் போவது உபபந்நமென்று ஸ்ரீ தேஶிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் அநுக்ரஹித்திருப்பதைப் பார்த்தால், வைதிகன் புத்ரர்கள் போன்றவர்களின் வ்ருத்தாந்தத்தை ஸமீகரணம் செய்வதற்காக ப்ராக்ருதாப்ராக்ருத பதார்த்தங்களின் சேர்க்கை உபபந்நமென்று வேறு கதியின்றிக்கே கல்பித்திருப்பதுபோல் தெரிகின்றதேயொழிய ப்ரமாணாந்தரங்களால் ஸித்தமான ஒரு நிர்ணயத்தைக்கொண்டு ப்ரஸ்துத விஷயத்தின் ஸாதுத்வத்தை ஸ்தாபிப்பதாகத் தெரியவில்லை. 'கயம் வடேச?' என்னும் உக்தி பங்கி, இதை வெளியிடுகிற தன்றோ? .... ரத்நபேடிகையில் எந்த மார்க்கத்துக்கு அபுநராவ்ருத்தி ஶாஸ்த்ரங்களில் சொல்லப் படவில்லையோ, அந்த மார்க்கம்தான் வைதிக புத்ரர்கள் வைகுண்டத்துக்குப்

போன மார்க்கம் என்று எழுதப்பட்டிருப்பதும் ஒரு நிர்ப்பந்தத்திலிருந்து நிவ்ருத்தியைத் தேடுபவர்களின் வார்த்தை போலவே இருக்கின்றதே! அப்படி அபுநராவ்ருத்தி சொல்லப்படாத மார்க்கமும் ப்ரஸ்துத வைதிகன் பிள்ளைகளுடைய மார்க்கத்தைத் தவிர்த்து வேறொன்றும் உண்டோ?" என்று. இதில் உள்ள ப்ரச்நங்கள் நாம் முன் கூறியுள்ளதனாலேயே உத்தோத்தங்களாயிருந்தும், இவ்வாக்யாநுபூர்வியைக் குறித்துச் சற்று விசாரிக்கவேண்டியது அவச்ய மென்று தோன்றுகிறது.

இதில் ஸாத்ய ஸாதக பாவம் விபர்யஸ்தமாக உபந்யஸிக்கப் பட்டிருக்கிறதென்பது, ஸித்தாஞ்ஜந வாக்யாநுபூர்வியைப் பார்த்தால் ஸ்பஷ்டமாகும். அங்கு ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கம் உபபந்ந மென்பது ப்ரதிஜ்ஞை. இதை ஸாதிப்பதற்காக எடுத்துக்கொண்ட மூன்று த்ருஷ்டாந்தங்களில் வைதிக புத்ர வ்ருத்தாந்தம் கநிஷ்டம். இது புராண ஸித்த மாகையால் ஸர்வ ஸம்ப்ரதிபந்ந மானது பற்றி இதை ஸாதிக்க வேண்டிய அவச்யமே கிடையாது. இது ஸ்வத:ப்ரமாண மாகையால் ப்ரமாணாந்தரங்களால் இதை ஸமீகரணம் பண்ணவாவது, இதன் ஸாதுத்வத்தை ஸாதிக்கவாவது யாதொரு ப்ரமேயமுமில்லை. ஆகையாலே தான் இதை த்ருஷ்டாந்தமாகக் கொண்டு ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்கத்தின் உபபத்தியை ஸ்வாமி ஸாதிக்கிறார். நிராக்ஷேபமான ப்ரஸித்த விஷயம் த்ருஷ்டாந்தமாக எடுக்க அடுக்குமே தவிர, விவாத க்ரஸ்தமானது த்ருஷ்டாந்த மாகாது. ஆகையால் தான் ‘கயஂவடெத?’ என்கிற ப்ரச்நம் பூர்வ பக்ஷியைக் குறித்துக் கேட்கப்பட்டது. ‘நீயே ஒப்புக்கொள்ள வேண்டிய இவ்ருத்தாந்தம், உன் ஆக்ஷேபத்தை நிரஸநம் செய்ய வில்லையா?’ என்பது இதன் தாத்பர்யம். இதைப் பற்றி வக்தவ்யாம்சம் எல்லாம் ஏற்கெனவே விவரிக்கப் பட்டிருக்கிற படியால், இங்கு அவற்றை அநுவதிப்பது அநாவச்யகம். ரத்ந பேடிகையி லுள்ள வாக்யங்கள் ஏதோ நிர்ப்பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்வவற்காக ஏற்பட்டன போல் தெரிகின்றதென்று சொல்வதும் யுக்தமல்ல. ப்ரத்யுத, லக்ஷண கல்பநாதி நிர்ப்பந்தங்களைத் தூரத் தள்ளி, ஸ்வதந்த்ரமான ந்யாய நிரூபண ஸரணியில் இது உபபாதிக்கப்படடிருக்கிற விஷயம் என்று ஏற்கெனவே பேசப்பட்டது. வைதிக புத்ரனுடைய மார்க்கத்தைத் தவிர்த்து வேறொன்றும் உண்டோ?' என்கிற ப்ரச்நம் அதற்கு முன் இந்த வாக்யாநுபூர்வியின் ஆரம்பத்தில், ‘வைதிக புத்ரர்கள் போன்றவர்களின் வ்ருத்தாந்தத்தை’ என்று சொல்லப் பட்டிருப்பதற்கும், ஸித்தாஞ்ஜநத்தில் ‘வைதிகவ-த்ராதெவ-ாமஜநஂ’ என்று ‘ஆதி’ சப்த ப்ரயோகத்துக்கும் விருத்தமாயிருக்கிறது. இந்த ‘ஆதி’ சப்தம், அர்ஜுந ப்ருகு நாரதாதிகளை ஸங்க்ரஹிக்கிறதென்று முன்பே சொன்னோம். ஆகையால் உபாயாநுஷ்டாந பலமாக சாஸ்த்ரங்கள் கூறும் மார்க்கங்களெல்லாம் அபுநராவ்ருத்தி பலங்கள்; மற்றவை யல்லவென்பது நிஷ்க்ருஷ்டாம்சம். வைதிக புத்ரர்கள் அந்த மார்க்கங்களுக்கு அர்ஹதை யில்லாதவராதலால், அவர்கள் திவ்ய தேசமாவது வேறு எந்த தேசமாவது போனதாக வைத்துக்கொண்டாலும் மோக்ஷ மடையவில்லை யென்பது ஸுஸ்திதம்.

கடைசியாக ஒரு விஜ்ஞாபநம் ப்ராப்தாவஸரம். இங்கு ஸம்பாதகர் ஆக்ஷேப மென்றிருப்ப தெல்லாம் பொதுவாக (impersonally) பூர்வ பக்ஷியின் ஆக்ஷேப மென்று கொள்ள வேணுமே தவிர, ஒரு வ்யக்தியைக் குறித்ததாக நினைக்கக் கூடாது. ஸம்பாதகர் தம் அதிகாரத்தை நிர்வஹிப்பதில் உள்ள கௌஶலாதிஶயத்தால், படிப்பவர்களின் அவதாநத்தை ஆகர்ஷித்து, அவர்களுக்கு ஸச்சாஸ்த்ர விசாரத்தில் ச்ரத்தையைப் பெருக்குவதற்காக இம்மாதிரி ப்ரச்நங்களை வெளியிடுவது ஸத்துக்களின் க்ருதஞ்ஜதாநுஸந்தாநத்துக்கு விஷயமாகிறது. இக்காலத்தில் வெளிவரும் நாநாவிதமான பத்ரிகைகளில் அர்த்தார்ஜநத்துக்காக நிரர்த்தகமாக ஸமஸ்யைகள் ப்ரசுரம் செய்யப்படுகின்றன. தத்ஸ்தாநத்தில் நம் ஸம்பாதகர் ஸார்த்தகமான ஶாஸ்த்ரார்த்த ஸம்பந்தமான ப்ரச்நங்களை வெளியிட்டு, பகவத் தாஸ்யைக ஜீவநர்களான ஸத்துக்களின் மநஸ்ஸை உல்லாஸிக்கச் செய்வது அத்யந்தம் அபிநந்தநார்ஹமே.

2

[தேன்பரை வித்வான் ஸ்ரீ உப. ஸா. ஸ்ரீ. ராஜகோபாலாசாரியர்]

அபுநராவ்ருத்தி விஷய ஸந்தேஹமும் அதற்கு ஸமாதாநங்களும், மறுபடியும் அவற்றில் ஸந்தேஹங்களும் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியைப் படிப்பவர்களுக்கு நன்கு தெரிந்திருக்கு மாதலால், அவற்றை அநுவதிக்காமல் ஸமாதாநத்தை மாத்ரம் யதாமதி விஜ்ஞாபநம் பண்ணிக்கொள்கிறேன்.

வைதிக புத்ரகள் பரப்ரஹ்மோபாஸநம் செய்து உபாஸகர்களுக்கே ப்ராப்யமான அர்ச்சிராதி மார்க்கத்தால் ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் விரஜையை அடைந்து, அதில் ஸ்நாநத்தால் ஸூக்ஷ்ம ஶரீரம் கழிந்து, திவ்ய ஶரீரம் பெற்றுப் பரப்ரஹ்மத்தைக் கிட்டி ஆவிர்ப்பூத குணாஷ்டக முடையவர்களாய்ப் பரிபூர்ண ப்ரஹ்மாநந்தாநுபவம் பெற்றவர்க ளல்லமையால், அவர்கள் மீண்டது விரோதமில்லை. ஆனால் அவர்கள் ஸர்வேச்வரனால் விலக்ஷணமான தன் ஸங்கல்பத்தினால் ஒரு கார்ய விஶேஷார்த்தமாக [க்ருஷ்ணார்ஜுநர்களைப் பார்க்கவேண்டியதற்காக] ப்ராக்ருத ஸ்தூல ஶரீர முடையவர்களாகவே தான் இருக்கும் ஓரிடத்தில் கொண்டுபோய் வைக்கப்பட்டவர்களாய், கார்ய முடிவில் அந்த ஶரீரத்துடனேயே ஸம்ஸாரத்துக்கு அனுப்பப்பட்டவர்க ளாகையால், ப்ரஹ்ம வித்வர்க்கத்தில் சேர்ந்தவர்களல்லர் என்னும் அர்த்தத்தை ஸ்வாமி தேசிகன் பரமபதார்ச்சிராதி பர்வாவில், "வைதிகன் புத்ராதிகள் இவ்வர்ச்சிராதி கதியாலே தேஶவிஶேஷ ப்ராப்தி பெற்றவர்க ளல்லாமையாலே அவர்களை மீட்டது விருத்தமன்று" என்று கம்பீரமாய் அருளிச்செய்திருக்கிறார். இந்த வாக்கியத்தில் விபஜ்யாந்வயமே தாத்பர்ய விஷயம். ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் உள்ள வாக்யத்திலும் விரோதமில்லை. எப்படியெனில்:—

அதில் நித்ய விபூதி பரிச்சேதத்தில் பகவானுடைய பர வ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சா ரூபமான ஐந்துவித விக்ரஹங்களிலும் பஞ்சோபநிஷத் ப்ரதிபாத்ய சுத்த ஸத்வ மயத்வத்தை நிரூபணம் செய்து, தேவ ஸித்த மநுஷ்யர்களால் ஸ்வர்ணாதி லோஹ ஶிலா தாரு முதலிய ப்ராக்ருத த்ரவ்யங்களால் நிர்மாணம் செய்யப்பட்ட ராமக்ருஷ்ணாதி பிம்பங்களிலும் விசிஷ்ட ப்ரதிஷ்டாநந்தரம் ப்ரஸாதோந்முக ஸர்வேச்வர ஸங்கல்பத்தினால் அப்ராக்ருதத்வம் அநுஸந்தேயம் என்று ப்ரக்ருத பிம்ப ஸத்ருஶமான அப்ராக்ருத ஶரீரத்துடன் எழுந்தருளி யிருக்கிறாரென்று

நிரூபித்துப் பிறகு, தேஜஸ் திமிரங்களுக்குப் போல ப்ராக்ருதாப்ராக்ருதங்களுக்கி எப்படி சேர்க்கை கூடுமென்ற ஶங்கைக்கு ஸமாதானமாக "ப்ராக்ருதா ப்ராக்ருத ஸம்ஸர்கோ...............கதம் பவேத?" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தத்தை விசாரிப்போம்.

அப்ராக்ருத பகவத் விக்ரஹத்திற்கு ப்ராக்ருத லோஹாதிகளோடு சேர்க்கை அநுபபந்ந மன்று. அந்யதா ப்ராருதாப்ராக்ருதங்களின் சேர்கையை அங்கீகரிக்காவிட்டால், [ப்ராக்ருதயோர்கேஷு] ப்ராக்ருத ஶரீர முடையவர்களான கௌஸல்யை தேவகீ முதலான ஜநங்களிடத்தில் [ஸம்பவ அவதாரா:] கர்ப்பவாஸ பூர்வகமாக ராமக்ருஷ்ணாதி ப்ராதுர்ப்பாவங்களும் [வரஜாவதேவி] விரஜாநதீயரூப சுத்த ஸத்வ த்ரவ்யத்தில் [ஸூக்ஷ்மஶரீரஸ்ய ப்ரஹ்மவித உத்க்ரமேஷு:] உபாஸந பூர்த்தியால் ஸ்தூல சரீரத்தி னின்றும் ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் வெளிப்பட்ட ப்ரஹ்ம ஜ்ஞாநிக்கு [மஜ்ஜநம்] சென்று ஸ்நாநமும் [வைதிகவுத்ராதேவஸ்ய மஜ்ஜநம்] ப்ராக்ருத சரீரத்தோடு கூடிய வைதிகன் புத்ராதிகளுக்கு அந்த விரஜாநதீ ரூப சுத்த ஸத்வ த்ரவ்யத்தில் ப்ராப்தியும் [கதம் பவேத்] எப்படிச் சேரும்? அதாவது: 'அஜாயமாநோ பஹுதா விஜாயதே' 'ஜந்மாநி தவ ஸந்தி தாநி மே' என்கிறபடியே லோகாநுக்ரஹார்த்தமாய் ஸ்வஸங்கல்ப ஸித்தங்களாய் ஶ்ருதீதிஹாஸாதிகளில் ப்ரஸித்தமான அவதாரங்களும் முக்தர்களின் கதியும் வைதிக புத்ராதிகளின் கதியும்போல ப்ராக்ருதார்ச்சையில் அப்ராக்ருத பகவத் விக்ரஹ சேர்க்கை உபபந்நம்தான் என்று தாத்பர்யம்.

இப்படி விபஜ்ய அந்வயிக்காமற் போனால் "விப்ராய தத்தா: புத்ரா யதாரூபம் யதாவய:" என்கிற ஸ்ரீ பாகவத வாக்யத்தின்படியும் 'வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு' என்கிற ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியின்படியும், வைதிகன் புத்ரர்கள் ப்ராக்ருத ஸ்தூல ஶரீரமுடையவர்களாகவே இருந்தார்க ளென்கிற அர்த்ததிற்கு விரோதம் வரும். ஆகையால் 'ஸூக்ஷ்மஶரீரஸ்யவைதிக புத்ராதே:' என்று அந்வயமில்லை. 'வரஜாவதேவி' என்கிற ஶப்தமும், 'ததஃ ப்ரவிஷ்ட ஸ்ஸலிலம் நபஸ்வதா பலீயஸைஜத்ப்ருஹதூர்மிபூஷணம்' என்கிற ஸ்ரீ பாகவத வசநத்தின்படி விரஜா நதீ ஜலத்தைச் சொல்கிறது. ஆகையால் ந்யாய ஸித்தாஞ்ஜந வாக்கியத்திலும் விரோதமில்லை. இந்த அர்த்தங்கள் இதன் வ்யாக் யாநங்களிலும் வ்யக்தம்.

ஆகையால் வைதிகன் புத்ரர்கள் உபாஸநம் செய்து ஶரீராவஸாநத்தில் ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் அர்ச்சிராதி மார்க்கமாய்ச் சென்று விரஜா நதீ ஸ்நாநத்தால் திவ்ய ஶரீரம் பெற்றுப் பரப்ரஹ்மத்தைக் கிட்டி, ஆவிர்ப்பூத ஸ்வஸ்வரூபர்களாய் ப்ரம்ஹாநுபவம் பெற்றவர்க ளெல்லாமையால், உபாஸந பூர்த்தியில் அர்ச்சிராதி மார்க் கத்தினலோ வேறு வழியினலோ திவ்ய ஸ்தாநத்தை அடைந்து ப்ரஹ்மாநுபவம் பெற்றவர் ஒருக்காலும் ஸம்ஸரியார்கள் என்னும் ஸித்தாந்தத்தினேடு விரோதமில்லை யென்பது அடியேனுடைய அபிப்ராயம்.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

3

[ஸ்ரீ. உப. வித்வான் கருடபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகையில் ஸ்ரீ. உ. வே. ஸம்பாதக ஸ்வாமி வேதாந்த விஷயமான ஒரு ஸந்தேஹத்தை உத்தாபித்ததையும், அதற்கு வித்வான்கள் ஸாதித்தருளிய ஸமாதாநங்களையும், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா வாசகர்கள் நன்கறியலாம். அந்த ஸமாதாநங்களிலும் கொஞ்சம் ஸந்தேஹம் அநுவர்த்திக்கிறதென்று ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்திருப்பதால், இந்த விஷயத்தில் ஆசார்ய ப்ரஸாதத்தால் அடியேற்குத் தோற்றிய விஷயத்தை ப்ரஸ்தாவிக்கிறேன். ஸமீசீநதையை ஸத்துக்கள் விவேசிப்பார்களென்று விச்வஸிக்கிறேன்.

'வைதிகபுத்ராநேவாஸௌ ஆநிநாய ஸ்வயம் ப்ரபு:' என்ற ந்யாய ஸித்தாஞ்ஜந ஸ்ரீ ஸூக்தியால் ப்ராக்ருத லோகத்தில் அப்ராக்ருத திருமேனியைக் கொண்டு ஈச்வரன் அவதரித்தால் ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்பந்தம் எப்படி உபபந்நமாகாது என்று ஶாஸ்த்ராபலாபம் செய்யகூடாதோ, அப்படியே ஜீவன் ப்ரக்ருத ஸூக்ஷ்ம ஶரீரத்துடன் ஸ்ரீ வைகுண்ட திவ்ய ஜநபத விரஜா நதீ கமநமும் வைதிக புத்ரர்களை ப்ராக்ருத ஶரீரத்துடன் ஈச்வரன் தன் ஸ்வாதந்த்ர்யத்தாலே பரமபதத்தில் ஒரு ஸ்தல விஶேஷத்தில் வைத்திருந்து தத்பித்ராத்யபேக்ஷையால் மீட்டுக்கொண்டு வந்ததும் விருத்தமன்று என்பது ஸ்பஷ்டமாகையால், வைதிக புத்ரர்களைக் கொண்டுவைத்த இடம் ப்ராக்ருத லோகமென்று சொல்வது உபபந்நமாகாது. ப்ராக்ருதாப்ராக்ருத ஸம்ஸர்க்காவிரோதத்துக்கு வைதிக புத்ரர்களை ஸ்வாமி எடுத்தது, அப்ராக்ருத லோக கமநம் வைதிக புத்ரர்களுக்கு ப்ராக்ருத ஶரீரத்துடன் உண்டு என்பதை த்ருடீகரிக்கின்றது. 'தன்னுடைச் சோதியில் வைதிகன் பிள்ளைகளை' என்று நம்மாழ்வாரும், நிரவதிக தேஜோ விஶிஷ்டமான தன்னுடைய ஸ்ரீ வைகுண்டத்திலே யிருந்த 'வைதிகன் பிள்ளைகளை உடலொடுங் கொண்டு கொடுத்தவனைப் பற்றி' என்று பிள்ளானும், எல்லா உலகும் கழிய அண்டபஹிராவரண ஸப்தகமும் கழியும்படி என்கை. 'திண்தேர்'—தேருக்குத் திண்மை கார்யாகாரம் குலையாமே ப்ரக்ருதிக்கும் மேலே சென்று மீண்டும் வரும்படியான தாமாக்ஷரம் என்று ஸாக்ஷாத் ஸ்வாமியும் அருளிச்செய்திருப்பதால், 'அதீத்ய ப்ரக்ருதிம் தஸ்ய ப்ராப்ய ஸ்தாநம் விஷ்ணோ: பரமம் பதம்! ஸ்வயைவ ப்ரபயா ராஜந் துஷ்ப்ரேக்ஷம் தேவதாநவை:॥' என்று சொல்லப்பட்ட பரமபதமே அது என்பது நிச்சிதம். ஆனால் பரமபதம் சென்றவர்களுக்குப் புநராவ்ருத்தி உண்டோவெனில், முமுக்ஷுவாய் ஸ்வீக்ருதோபாயனாய் நித்ய விபூதியான பரமபதத்தில் சென்று ஸாயுஜ்ய மென்கிற ஸ்வாபாவிக பரமாத்ம பரிபூர்ணநுபவம் பெற்றவரே முக்தரென்று சொல்லப்படுபவர். ஆகையால் இந்த வைதிக புத்ரர்களுக்கு முமுக்ஷுத்வமும் உபாயாந்வயமும் மோக்ஷ ப்ராப்தியு மில்லாததால், மீட்சிக்கு ஹேதுவான கர்மவஶத்தால் பூமிக்கு வந்து கர்மாநுபவம் பண்ணுகைக்கு விரோதமில்லை. சிறையிலிருந்த ராஜகுமாரனை ராஜா ஸ்வஸ்வாதந்த்ர்யத்தால் சில காலம் தன் வீட்டு அறையில் போகட்டுப் பூட்டிவைத்தால், அவன் ராஜபதம் பெற்றவனாகானிறே. 'அர்ச்சிராதி மார்க்கத்தாலே தேஶவிஶேஷ ப்ராப்தி பெற்றவரல்லாமையாலே' என்று அருளிச்செய்ததும் தத்பூர்வாபர நியதமான பரிப்ரச்ந தராந்வய பரம பலமான பரமாத்ம பரிபூர்ணநுபவ ரூப பலாந்வயத்தையும் ஆக்ஷேபத: வ்யவச்சேதிக்கிறது. அர்ச்சிராதி கதி உள்ளவர்களுக்கு நிருக்த உபாய பலங்கள் நியதமிறே. அவர்களிறே அபுநராவ்ருத்தர்கள். அர்ச்சிராதி கதி ச்ருதியில், இந்த வழியால் போனவர்கள் திரும்புகிறதில்லை யென்றிருப்பதால், அது எப்படிக் கூடும்? முக்தர்கள் பரமாத்மாநுஸஞ்சரணம் பண்ணுகிறதாகவும் ச்ருதி இருப்பதால், அவன் இந்த லீலாவிபூதியில் அவதரிக்கும்போது முக்தர்களும் இங்கு வரலாமே என்ற சங்கையைப் பரிஹரிப்பதற்காக 'நாவர்த்ததே' என்பதற்கு புநஶ் ஸஞ்சரியார்கள் என்று கீழ் வாக்யத்தில் அருளிச்செய்து, அதற்கு மேலும், வைதிக புத்ரர்கள் பரமபதத்திலிருந்து வந்தே ஸம்ஸரிக்கவில்லையோ என்று சங்கைவர, பரமபதஸோபாந வாக்யம் அவர்களுக்கு உபாயாந்வயமும் பரமாத்மாநுபவமும் இல்லாததால் ததேகரூபவர்ச்சிராதி கதியுமில்லை யாகையால் 'ஸ தேந ப்ரஹ்ம ... ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே' என்கிற ச்ருதி வைதிக புத்ரர்களை விஷயீகரியாததலால், அர்ச்சிராதி கதர்களுக்கு அபுநராவ்ருத்தி நிஷ்ப்ரத்யூஹை யென்று ஸமர்த்தநாபிப்ராயக மாகையால்,

அதைக் கொண்டு அந்ய மார்க்கத்தால் பலாந்தரானுபவ விளம்ப ஸஹர்களாய்ப் பின்பு காலக்ரமேண முக்தியையும் அடைந்த மதுவித்யா நிஷ்டாயோத்யக சராசர சைத்யாதிகளுக்கு அர்ச்சிராதி கதி அபாவ மாத்ரத்தாலேயே புநராவ்ருத்தி சொல்லுகை மஹா பாரதாதி ப்ரமாணாந்தரங்களுக்கும் விருத்தமாம். ஆகையால் லோகாந்தர ப்ரயோஜநாந்தர அநுபவ விளம்ப அஸஹரான முமுக்ஷுக்களான பக்த ப்ரபந்நர்களுக்கு உத்ஸர்க்க ஸித்தமான அர்ச்சிராதி கதியே. மற்றும் அங்கங்கே உபாஸந விசேஷாநுஷ்டாந பலாந்தர ப்ராப்தி பூர்வக முமுக்ஷுக்களுக்கு மார்க்காந்தரத்தாலும் முக்தி அடையலாம். எந்த வழியால் முக்தரானாலும் முக்தர்களுக்குப் புநஸ் ஸம்ஸாரமில்லை. இது ச்ருதி ஸம்ருதி இதிஹாஸ புராண த்ரமிடோபநிஷதாதி ஸதாசார்ய ஸம்ப்ரதாய பரிசீலந பரர்களுடைய ஸித்தாந்தம். வைதிக புத்ரர்கள் தம்முடைய இச்சையின்றிக்கே வாயுஶ்சகாஷ்டி ஹ்ருஷிதசரணகாஷ்டாஷிவசுஸி அர்ஜுந வைதிக ப்ராம்ஹணர் இருவருடன் க்ருஷ்ணன் தேரில் போன மார்க்கத்தாலேயே முன்பு பரமபதம் போயிருக்கலாம். ஆகையால் அல்ப ஶக்திக ஜீவர்களான வைதிக புத்ரர் அப்ராக்ருத லோகத்துக்குப் போக ஶக்தரோ என்கிற ஆக்ஷேபமும் தத்தோத்தரம்.

ஸ்ரீ:

செய்திகள்.

ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியின் வித்வத் ஸபா.

ஸ்ரீரங்கத்தில், ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸேத்யாதி குண ஸம்பூர்ணராய் எழுந்தருளி யிருந்த பௌண்டரீகபுரம் ஆண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில் 6-8-46 செவ்வாய்க்கிழமை யன்று ஸ்ரீ. உ. வே. வித்வான் ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமியினால் வழக்கம்போல் ஸ்ரீரங்கம் கீழ் உத்தர வீதியிலிருக்கும் ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் வித்வத் ஸதஸ் ஆரம்பிக்கப்பட்டது. அங்ஙுத் தினந்தோறும் காலை மாலை இரண்டு வேளைகளிலும், ஸ்ரீமத் வேதமார்க்க பரமஹம்ஸேத்யாதி ஸகலகுண ஸம்பூர்ணராய் எழுந்தருளி யிருக்கும் மன்னார்குடி ஆண்டவன் ஸ்ரீரங்கநாத மஹா தேசிகன் எழுந்தருளியிருந்து ஸதஸ்ஸை நிர்வஹித்தருளினர்.

புத்தன்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, மதுராந்தகம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வீரராகவாசார்ய ஸ்வாமி முதலிய ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான அநேக வித்வான்களும், ஸ்ரீரங்கம் ஸ்ரீ. உ. வே. வித்வான் கோவிந்தாசார்ய ஸ்வாமி, உத்தமசேரி ஸ்ரீ. உ. வே. வித்வான் ரங்கஸாமி அய்யங்கார் ஸ்வாமி முதலிய தென்னசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்வாமிகளுமாக சுமார் 40-வித்வான்கள் எழுந்தருளி யிருந்தார்கள். இவர்களே யன்றி, மத்வ ஸித்தாந்த வ்யாகரண வித்வான் மஹா மஹோபாத்யாய திருப்பதி ஸேதுமாதவாசார்யரும் எழுந்தருளி யிருந்தார். மற்றும் அநேக உத்யோகஸ்தரும் தநவான்களும் வந்திருந்தார்கள்.

அப்போது புத்தன்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்யராலும் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யராலும் ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தில் அதிகாராநுகுணமாக வாக்யார்த்தங்களும் பரிக்ஷையும் நடத்தப்பட்டன. ப்ரம்ஹ ஸ்ரீ அநந்த க்ருஷ்ண சாஸ்த்ரிகளால் ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தின்மேல் ஆரோபிக்கப்பட்ட தூஷணங்களுக்குக் கண்டநமாக ஸ்ரீ. உப. கோபாலாசார்ய ஸ்வாமியினால் எழுதப்பட்ட க்ரந்தமும் ஸபையில் வாசிக்கப்பட்டுப் பண்டிதர்களால் ச்லாகிக்கப்பட்டது. இப்படி 4-தினங்கள் இரண்டு வேளைகளிலும் ஷை வித்வத் ஸபை மிகவும் அழகாக நடைபெற்றது.

10—8—46 கடைசித் தினமான சனிக்கிழமையன்று ஸாயங்காலம் 3-மணிக்குக் கல்யாணபுரம் ஸ்ரீ. உ. வே. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியினால், திருமங்கைமன்னன், ஆண்டாள் இவர்களுடைய செவிக்கினிய செஞ்சொற்கள் சிறிது நேரம் காநரஸத்துடன் சொல்லப்பட்டு, ஸபையாரால் சிந்தை மகிழ்ந்து அநுபவிக்கப்பட்டன.

பிறகு ஸ்ரீ. உப. புத்தன்கோட்டகம் ஸ்வாமியினால், பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸமஹாதேசிகனுடைய ஜ்ஞாநம் அநுஷ்டாநம் வைராக்யம் முதலிய குணாதிசயங்களும், ஷை ஸ்வாமியின் சிஷ்யரான ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யரின் ஆசார்ய பக்தி வேதாந்த விஜ்ஞாநம் பண்டிதபக்ஷபாதம் ஔதார்யம் முதலிய குணங்களும் பரக்கப் பேசப்பட்டன. பின்னர் ஸ்ரீ. உப. கோபாலாசார்ய ஸ்வாமியால் பண்டிதர்களுக்கு யதோசிதம் ஸம்பாவனை ஸமர்ப்பிக்கப்பட, பண்டிதர்களுடைய ஆசீர்வாதத்துடன் ஸதஸ் முடிவுற்றது.

ஸ்ரீரங்கம்,
20-8-46.

எம்பூர். பொன்மலை. ராமஸ்வாமி ஐயங்கார்.

𑌶𑍍𑌰𑍀

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்.

கல்கத்தாவில் அட்டூழியம்.

ஸ்வராஜ்யம் கிடைத்ததன் பலனாக நமக்குள் கலஹம் ஏற்படுமோ வென்று நாம் ஶங்கித்தோம். சென்ற ஸஞ்சிகையில் அந்த ஶங்கையை ஒரு வாறு வெளியிட்டு, நமக்கு எவ்வித துன்பமும் நேராமல் ஸ்ரீ ஶரண்யன் அநுக்ரஹிக்கவேண்டு மென்று ப்ரார்த்தித்து மிருந்தோம். நம்முடைய ப்ரார்த்தனைக ளெல்லாம் நம் இஷ்டப்படி நிறைவேறுகின்றனவா? இந்த ப்ரார்த்தனை ஸ்ரீ ஶரண்யனுடைய ஸங்கல்பத்துக்கு ஒத்து வராததால் அது பயன் பெறுமற் போய்விட்டது. சென்ற ஆகஸ்டுமீ 16வ வெள்ளிக்கிழமையன்று நமது தேஶத்திற்கு முக்ய பட்டணமாகிய கல்கத்தா நகரில் ஜனங்களுக்குள் பெருத்த கலஹம் ஏற்பட்டு, அதிமாத்ரம் கோரங்களான ஸம்பவங்கள் நேர்ந்தனவாகப் பத்ரிகை வாயிலாய் உணர்கிறோம். அங்குப் பல்லாயிரக் கணக்காக ஜனங்கள் மாண்டனராம். ஆயிரக்கணக்கான வீடுகள் தீக்கு இரையாக்கப் பட்டனவாம். வீட்டையும் வாசலையும் விட்டுக் குழந்தைகளை எடுத்துக் கொண்டு உயிர் தப்பினல் போதுமென்று வெளியில் ஓடிவந்த ஸ்த்ரீகளும் வ்ருத்தர்களும் கத்தி வெட்டுக்கு இரையாகி மடிந்தார்களாம். குழந்தைகளும் துண்டு துண்டாக வெட்டப்பட்டுப் பல விடங்களிலும் எறியப்பட்டனவாம். உயிர் தப்பி ஓடின பாலர் பெண்டிர் ஆடவர் முதலியோர் மீண்டும் இழுக்கப்பட்டு, எரிந்துகொண்டிருந்த தீயில் எறியப்பட்டார்களாம். கணக்கற்ற சிறுவர்கள் தடியால் அடிக்கப்பட்டுச் சாக்கடையில் எறியப்பட்டார்களாம். மற்றும் பல அநிர்வசநீயமும் அஸஹ்யமுமான ஸம்பவங்கள் நடந்தனவாம். இம்மாதிரி நாலு தினங்கள் மநுஷ்யர்களால் நினைக்கக்கூடாத அளவு அட்டூழியங்கள் நடைபெற்றன வென்று அறிகிறோம். ஸர்க்கார் கணக்குப்படி சற்றேறக்குறைய ஆறாயிரம் ஜனங்கள் மாண்டார்க ளென்றும், இருபது முப்பதாயிரம் ஜனங்கள் கை கால் முதலிய அவயவங்கள் வெட்டுப்பட்டு ஆஸ்பத்ரிகளில் துடித்துக்கொண் டிருக்கிறார்க ளென்றும் அறிகிறோம். கோடிக்கணக்கான ஸொத்து நாஶமும் ஸம்பவித்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்த நிகழ்ச்சியை நினைக்கும்போதே நமது நெஞ்சம் குமுறுகிறது.

இதில் யாரை யார் அடித்தார்க ளென்பதை இப்பொழுது சொல்ல ஸாத்ய மில்லை. ஹிந்துக்களுக்கும் துருஷ்கர்களுக்குமே கலஹம் ஏற்பட்ட தென்று மாத்ரம் தெரிகிறது. பிறர்க்கு ஹிம்ஸை செய்வதிலேயே ருசியுள்ள

துஷ்டர்கள் எல்லைமீறி நடக்க ப்ரவர்த்தித்துவிட்டால், யார் என்ன செய்யக் கூடும்? அநேக திநங்கள் தெருக்க ளெல்லாம் பிணக் காடாகவே அகற்றுவா ரற்றுக் கிடந்தனவாம். அந்தப் பிணங்களை அப்புறப்படுத்தித் தெருக்களைச் சுத்தம் செய்யப் பல திநங்கள் பிடித்தனவாம். கடைத்தெருவுக ளெல்லாம் சூறையாடப்பட்டு நாசம் செய்யப்பட்டுவிட்டபடியால், இந்தக் கோரமான ஆபத்திலிருந்து தப்பி யிருந்தவர்களுள் பலர், ஓரிடத்திலும் உணவுப் பொருள் களைப் பெறுமல் பட்டினி கிடந்து உயிர் துறந்தார்களாம். தபால் தந்தி ரயில் ஆபீஸுகளெல்லாம் நிர்வ்யாபாரமாக நின்று விட்டபடியால், அநேக திநங்கள் வரை அவ்விடத்து வ்ருத்தாந்தங்கள் ஒன்றும் வெளிவராமல் இருந்தன. ஹிந்துக்களே முதல்முதல் தௌஷ்ட்யத்தில் இறங்கினர்க ளென்றும், தாங் கள் தங்களை ஸம்ரக்ஷித்துக்கொள்ள ப்ரயத்நப்பட்டபோது சிலருக்கு அபாயம் நேர்ந்திருக்கலா மென்றும், அதற்குத் தாங்கள் எப்படிப் பாத்யப்பட்டவர்க ளாகக் கருதப்படக் கூடுமென்றும் துருஷ்கர்கள் சொல்லுகிறார்கள். ஹிந்துக் களைக் கேட்டால், அவர்கள், துருஷ்கர்களே தாங்கள் விரும்பியபடி தமக்கு ராஜ்ய நிர்வாஹத்தில் அதிகாரம் கிடைக்கவில்லை யெனும் காரணத்தால் ஆக்ரஹம் கொண்டு, மஹத்தான பூர்வ ஸம்விதாநத்துடன் திடீரென்று கலஹத்தை ஆரம்பித்தார்கள் என்று சொல்லுகிறார்கள். உண்மை தெய்வத் துக்கே தெரியும். எது எவ்வித மிருந்தாலும், ஒரு விஷயம் நிராக்ஷேபமாக இருக் கிறது. அதாவது: துஷ்டர்கள் யதார்ஹம் நிக்ரஹிக்கப் படவில்லை என்பதே. வெறி பிடித்தவர்கள் நாலு திநங்கள் அல்லும் பகலும் தம் மனம்போன போக்காக ஆடினர்க ளென்றால், அதை நாம் என் என்போம்?

கல்கத்தாவைத் தவிர பம்பாய் முதலிய மற்றும் சில விடங்களிலும் ஸாது ஜநங்கள் ஹிம்ஸிக்கப்பட்டார்க ளென்று செய்தி வெளிவருகிறது. இன்னும் என்னென்ன ஸம்பவங்கள் எங்கெங்கு நடக்கப்போகின்றனவோ யாரால் சொல்லக்கூடும்? எல்லாம் பகவத் விசேஷ்டிதம்.

ஜிவ்ஹாமி கடஹாணி தவாஸ்ஸ்தாநி வஹிவஹாணி வஹிவெஷவஹ்ஷயஃ ஸூவஷி ।
நாநெந்ஹாஷெகி கதஹா ஜஙதவஸஜெகொ யாதா வியாதா அ விஹாஹவவஸ் ॥

என்கிறபடியன்றே அவனுடைய ப்ரபாவம் நிற்கின்றது.

* * * *

ஸ்ரீ கீதாபாஷ்யத்தில் ஒரு ஸந்தேஹம்.

பகவத் கீதையில் ஏழாவது அத்யாயத்தில் ஜ்ஞாநிகளுடைய தௌர்லப் யத்தை உபபாதிக்கு மிடத்தில், 'இந்த்ராதி தேவதைகளை ஆராதிப்பவர்கள் அந்தந்த தேவதைகளை அடைகிறார்கள்; என்னுடைய பக்தர்கள் என்னை அடைகிறார்கள்' என் னும் அர்த்தமுள்ள "தெவாநு தெவயஜொ யாஷி உஹத்தா யாஷி உாஉவி" என்னும் ச்லோகம் காணப்படுகிறது. இதில், "உஹத்தாஃ" என் னும் பதத்தால் தேவதாந்தர ஸங்கம் பலாந்தர ஸங்கம் ஆகிய இரண்டையும் த்யஜித்திருக்கும் ஜ்ஞாநிகள் சொல்லப்படுகிறார்களா? இல்லாவிட்டால் தேவ தாந்தர ஸங்கத்தை மாத்ரம் விட்டு விட்டுப் பலாந்தரங்களில் ஸங்கம் வைத்துக் கொண்டிருக்கும் ஆர்த்தன் முதலான மூன்று வித ஸுக்ருதிகளும் சேர்க்கப் பட்டுச் சதுர்வித ஸுக்ருதிகளும் சொல்லப்படுகிறார்களா?" என்னும் ஸந்தேஹம் ஜநிக்கின்றது. தேவதையை ஆராதிப்பவர்களை, பலாந்தரத்தை விரும்பிக் கேவலம் தேவ தாந்தரத்தையே ஆராதிப்பார்கள்; தேவதாந்தர ஸங் கத்தை விட்டுப் பலாந்தர ஸங்கத்தை விடாமல் பகவானையே ஆராதிப்பவர்கள்; இரண்டு ஸங்கங்களையும் விட்டுவிட்டுப் பகவத் ப்ரீணநைக ப்ரயோஜநர்களாகப்

பகவானை ஆராதிப்பவர்கள்; ஆக மூன்று வகுப்பினராகப் பிரிக்கலாம். இவர்களுள் "தேவாந்" இத்யாதியான வாக்யம் முதல் வகுப்பினரைக் குறிக்கின்றது என்பது நிர்விவாதம். 'உஜூக்தா:' இத்யாதியான வாக்யம் மற்றை இருவரையும் குறித்துப் பேசுகின்றதா? இல்லாவிட்டால் மூன்ருவது வகுப்பினரை மாத்ரம் பற்றியதா? என்பது தான் ஸந்தேஹம்.

இந்த ஸந்தேஹத்துக்குக் காரணம் என்ன வென்ருல்:— 'உஜூக்தா:' என்னும் பதத்தின் அர்த்தத்தை விவரிக்கும் 'உஜூக்தாகுவி-தேஷாஜேவ கஉஷணாം உஜாஙாய நஙஜுவ தாம் ஜூாகுவா வரிஹ்ஷஹமுவாம் ஹம் தஜூக்தா உதீணமைநகவூயொஜநா:" என்னும் கீதா பாஷ்ய வாக்யமே. இந்த வாக்யத்தில் பலாந்தர ஸங்கத்தை விட்டவர்களென்றும், பகவத் ப்ரீணநம் ஒன்றையே ப்ரயோஜநமாகக் கொண்டவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறபடியால், அதனுல் ஜ்ஞாநியே நிர்த்தேசிக்கப் படுகின்ருன்' என்று சொல்வதாக ஏற்படுகிறது. மூலத்திலே 'தேவாந் தேவயஜோ யாந்தி' என்னும் வாக்யம் ஆராத்ய இந்த்ராதிகள் பகவானுடைய ஶரீரங்கள் என்னும் ஜ்ஞாந மின்றிக்கே கேவல இந்த்ராதிகளை மாத்ரம் ஆராதிப்பவர்களைக் குறிக்கிறபடியால், 'உஜூக்தா:' இத்யாதியால் அவர்களைக் காட்டிலும் வ்யாவ்ருத்தர்கள் க்ரஹிக்கப் படுவதாகத் தெரிகிறது. இதனுல், கேவல இந்த்ராதிகளை மாத்ரம் ஆராதியாமல் அந்த இந்த்ராதிகள் பகவானுடைய தநுக்கள் (ஶரீரங்கள்) என்னும் ஜ்ஞாநத்துடன் பகவானையே ஆராதிக்கும் பலாந்தர ஸங்கிகளும் 'உஜூக்தா:' என்னும் பதத்தால் குறிக்கப்படுகிருர்கள் என்று சொல்லப்பட்டதாயிற்று. ஸ்ரீ சந்த்ரிகையில், 'உஜூக்தா யாந்தி உாஉவி ஊதஜூக்ரு ஹஹவதி மெஙாஙணாய-ஊநாஉவி ஜொகெஷ விஹ்ஜஉ:' என்று விவரிக்கப்பட்டிருக் கிறதன்ருே? இப்படி இருக்கையில் ஸ்வாமி ஏன் 'உஜூக்தா:' என்னும் ஶப்தத்தைப் பலாந்தர ஸங்கிகளை விலக்குவதாக வ்யாக்யாநம் செய்தருளி யிருக்கிருர்?

நிற்க: ஸ்வாமியே அடுத்த ச்லோகத்தின் அவதாரிகையில் 'ஊதஜெதஃ' என்று சதுர்வித ஸுக்ருதிகளைக் காட்டிலும் வேறுபட்டவர்களை நிர்த்தேசிக்கிருர். ஸ்ரீ சந்த்ரிசையில் அம்மாதிரியே விவரணம் செய்யப்பட்டிருக்கிறது. 'ஊதஜெ-அதஃவிஷயஸுகூ திஹெஜூாஉநெஜூ' என்பது சந்த்ரிகை வாக்யம். இதரர்கள் சதுர்வித ஸுக்ருதிகளைக் காட்டிலும் மற்றவர்களானுல், 'பக்தர்கள்' என்னும் ஶப்தம் சதுர்வித ஸுக்ருதிகளையும் நிர்த்தேசிப்பதாகவே க்ரஹிக்கவேண்டு மன்ருே?

மேலும்: ப்ரகரணத்தைப் பார்த்தாலும், 'உஜூக்தா:' என்பது பகவானிடத்தில் பலாந்தரத்தை அபேக்ஷிக்கு மவர்களை வ்யாவர்த்திக்க வில்லை யென்று சொல்லவேண்டும். 'யொ யொ யாம் யாஙநுஃழ' என்றும், 'தஸ்ஜூாஙாய ஶீஹதெ' என்றும், தேவதாந்தர ஸங்கிகளைப் பற்றி மாத்ரம் ப்ரஸ்தாவித்துவிட்டு, 'தேவாந் தேவயஜோ யாந்தி' என்று உபஸம்ஹரிக்கிறபடியால், 'உஜூக்தா:' என்பது தேவதாந்தர ஸங்கத்தை மாத்ரம் விட்டவர்களைக் குறிக்கின்றது என்றே சொல்லவேண்டு மன்ருே? பாஷ்யத்தில் ஏன் அந்தப் பதம் ஸங்கோசிக்கப்பட்டு விவரிக்கப்பட்டிருக்கின்ற தென்பது விளங்கவில்லை.

* * *

தமிழ்நாடு ... நூலகம்

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

விற்பனைக்குத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

			ரூ. அ. ப.
1.	ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் (வங்கீபுரம் ஸ்ரீ. உ. வே. வாஸுதேவாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த தமிழ் வியாக்யானத்துடன் கூடினது.)	...	0–12—0
2.	ஸ்ரீ யாதவாப்யுதயம் 13, 14, 15, ஸர்க்கங்கள் (ஸ்ரீ. உ. வே. ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த தமிழ் வியாக்யாநத்துடன் கூடினது.)	...	2-12—0
3.	ஸுபாஷித நீவி ௸	...	1—8—0
4.	ஈசாவாஸ்ய உபநிஷத் (பண்டிதரத்நம். ஸ்ரீ. உ. வே. உத்தமூர். வீரராகவாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த தமிழ் வியாக்யாநத்துடன் கூடினது.)	...	0—8—0
5.	யதீந்த்ர மத தீபிகை (ஸ்ரீ. உப. வே. திவான்பகதூர். V. K. ராமாநுஜாசார்ய ஸ்வாமி அருளிச்செய்த தமிழ் வியாக்யாநத்துடன் கூடினது.)	...	4—8—0
6.	திருவாய்மொழி ௸	...	10–0—0
7.	ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார ப்ரமாணத்திரட்டு	...	1—0—0
8.	அதிகார ஸங்க்ரஹ சுலோகங்கள்	...	0—8—0
9.	ஸ்ரீமத் அதிகரண ஸாராவளி-1, 2, பாதங்கள் (தமிழுரையுடன் கூடினது.)	...	1—5—0

(எல்லாவற்றுக்கும் தபால் செலவு வேறு.)

ஸ்வல்ப காபிகளே கைவச முள்ளன.

சி. ர. ஸ்ரீநிவாஸ பாட்ராசாரியர்,
47, பாட்ராசாரியர் தெரு, கும்பகோணம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.